(ஊ) சேலம் மத்திய கூட்டுறவு வங்கி அதனுடன் இணைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்க மறுத்தலும், விவசாயிகள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. சோ. அழகர்சாமி அவர்கள்

" சேலம் மத்திய கூட்டுறவு வங்கி அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 67 கூட்டுறவு சங்கங்களுக்கு கடன்வழங்க மறுப்பதால் அவ் வட்டாரத்திலுள்ள மக்கள் விவசாயமே செய்ய முடியாமலும், தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களை வாங்க முடியாமலும் சுமார் 1 லட்சம் விவசாயிகள் பெரும் பாதிப்பிற் குள்ளாகியிருக்கும் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை விவாதிக்க "

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இது முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சிறுமுகை "சவுத் இண்டியா விஸ்கோஸ்" தொழிற்சாலையில் தொழிலாளர்கள் போராட்டம் நடைபெறுவது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது பற்றி என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்கு இன்னும் கிடைக்க வில்லை. அடுத்து அரசினர் தனித் தீர்மானம்.

3. அரசினர் தனித் தீர்மானம்

1975-ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவினை செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை ஏற்று உறுதி செய்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

" சிக்கிமை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென " 1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பதாறுவது திருத்த) சட்டம் " என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும்

1975 மே 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பகுதி (2)னது வரம்புரையின் எல்லேயளவிற்குள் வரும் சட்டத் திருத்தங்களே இப்பேரவை ஏற்று உறுதி செய்கிறது"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இந்தத் தீர்மானத்தினுடைய முக்கியக் கருத்துக்களே இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். சிக்கிம் இந்தியா வோடு இணையாத ஒரு பகுதியாக இருந்தது. ஏற்கெனவே பாராளு மன்றத்தில் அரசமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து இந்திய நாடாளுமன்றத்தில் சிக்கிம் பிரதிநிதி பங்கெடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டிருந்தது. இப்போது இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் சிக்கிமை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கு வகை செய்திருக்கிறார்கள். இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலம் என்ற முறையில் மக்களவையில் ஒரு இடமும், மாநிலங்கள் அவையில் ஒரு இடமும் அதற்கு ஒதுக்கப்படுகின்றன. இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் இரண்டு அவை களிலுலும் நிறைவேற்றப்பட்டு இப்போது குடியரசுத் தலேவர் ஒப்பு தலேப் பெற வேண்டிய நிலேயில் உள்ளது. இதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 368 (2)-வது பிரிவின்கீழ் இத்திருத்தங்கள் பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்களாலும் ஏற்று உறுதி செய்யப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. இதனே பாதிக்கு மேற்பட்ட மாநில சட்ட மன்றங்கள் ஏற்றுக்கொண்ட பிறகுதான் குடியரசுத் தலேவர் அதற்கு ஒப்புதல் அளிக்க முடியும். அந்த வகையில் மாநில சட்டமன்றங்களின் கருத்தறிய அந்தச் சட்ட முன்வடிவு எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த மாநிலத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதனேத்தான் நான் தீர்மான வடிவத்திலே இங்கே கொண்டுவந்திருக்கிறேன்.

இந்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கம் சிக்கிமை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக—முழுமைபெற்ற ஒரு மாநிலமாக இணேக்கிறது என்பதுதான். அதுமட்டுமல்ல. அது பாராளுமன்றத் திலும், மக்கள் அவையிலும் பிரதிநித்துவம் பெறுகிறது. இதற்கு வழி செய்கிற அளவில் இந்திய பாராளுமன்றத்தில் அரசமைப்பு திருத்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

முன்பே சிக்கிம் மன்னர் சோக்கியாலுக்கும் அந்நாட்டு மக்கள் அவைக்கும் ஒரு உடன்பாடு நடந்தது. அந்த உடன்பாட்டுக்கு மாருன வகையில்—நாட்டின் ஜனநாயகத்திற்கு உலே வைக்கின்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மே 2

முறையில்—மக்களின் எண்ணங்களுக்கு மாறுபாடாக சிக்கிம் மன்னர் நடந்துகொள்கிறார் என்று அந்நாட்டு மக்கள் அவைக்கும், மன்னருக்கும் பல விவாதங்களும், போராட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

சிக்கிம் மன்னர் நாட்டு மக்களுக்கு விரோதமாக நடக்கிறார். ஜனநாயகத்தை மதிக்க மறுக்கிறார்—உடன்பாட்டை மீறுகிறார்—ஆகவே சிக்கிம் இந்தியாவோடு இணைவது பொருத்தமாக இருக்கும்—சிக்கிம் நாட்டின் பாதுகாப்பிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியாவோடு இணைவதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற வகையில்—இந்த ஆண்டு ஏப்ரல் 10-ஆம் நாளன்று சிக்கிம் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதில் சிக்கிம் மன்னர் பதவி ஒழிக்கப்படவேண்டும் என்றும், குடியாட்சிப் பொறுப்புள்ள அரசாக சிக்கிம் இந்தியாவுடன் பூரணமாக இணையவேண்டும் என்றும் சொல்லி—சிக்கிம் மக்கள் அவையில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

அதற்குப் பிறகு பொதுமக்களுடைய முழு ஒப்புதலையும் இதற்குப் பெற அந்நாட்டு மக்களின் கருத்தை அறியவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். அதன்படி 1975 ஏப்ரல் 14-ஆம் நாளன்று இந்தக் கருத்துபற்றி அந்நாட்டு மக்களின் கருத்தறியும் பொருட்டு அங்கே வாக்கெடுப்பு நடைபெற்றது. அங்கே 97 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இந்த முடிவுக்கு ஆதரவாக 59,637 வாக்காளர்கள் தம் வாக்குகளை அளித்தார்கள். 1,496 வாக்காளர்கள் மட்டுமே இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பாக வாக்களித்தார்கள்.

59,637—பெரும்பான்மையான வாக்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் தீர்மானம் அங்கே மக்கள் அவையில் நிறைவேற்றப்பட்டு இந்திய பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டு—இதன் அடிப்படையில் அரசமைப்பு திருத்தச் சட்டம் இந்திய பாராளுமன்ற இரண்டு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இப்போது அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிற முறையில் நான் இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்திருக்கிறேன். இந்தியக் குடியரசில் உள்ள 21 மாநிலங்களோடு சிக்கிமும் சேர்ந்து இனி 22-வது மாநிலமாக இது விளங்கும். நான் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை இந்தப் பேரவை ஏற்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1975 மே 2]

திரு. ஆலடி அருணை: பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கிம் பிரச்சினைபற்றி கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் நான் கொடுத்தேன். இதற்கு எந்தத் திருத்தமும் கொடுக்கக் கூடாது என்று சட்டப் பேரவைத் துறையில் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 368-இன்படி குறிப்பிட்ட பகுதிகளைத் திருத்த வேண்டுமானால் பார்லிமெண்டுக்கும், சட்டசபைகளுக்கும் தான் அதிகாரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிற காரணத்தினுல் இப்படிப்பட்ட அடிப்படையில் திருத்த வேண்டுமென்றுல் திருத்துகின்ற அதிகாரத்தை இந்தச் சட்டமன்றமும் பெற்றிருக்கிறது என்றே சொல்லியிருக்கிறார்கள். கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் ஜட்ஜாகப் பணியாற்றிய முகர்ஜி அவர்கள் இதுபற்றி ஒரு தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

'An amendment of the Constitution properly falls within the sphere of the legislative power of the Parliament and in certain specified cases also of the State Legislature.'

என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல,

'This ratification makes the State Legislature a Part of the Constitution amending machinery'

என்று நம்முடைய சட்டமன்றத்தை லெஜிஸ்லேச்சரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி நமக்கு உரிமை இருக்கும்போது, அரசியல் சட்டத்தில்

When we have the right to amend the Constitution in certain specified cases, you are disallowing the motion that was brought forward by me.

இந்த ராட்டிஃபிகேஷனைப் பொறுத்தமட்டில், ஒன்று மொத்தமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது இந்த அவையைப் பொறுத்த மட்டில் ராட்டிஃபிகேஷனை நாம் ஒத்துக்கொள்ளலாம், அல்லது மறுக்கலாம். இப்படி நமக்கு உரிமையிருக்கிறது. ஆனால், முன் மொழியப்பட்ட தீர்மானத்திற்கு திருத்தம் கொடுக்கக் கூடாது என்றுல், அதனுடைய பொருளை என்னுல் புரிந்துகொள்ள முடிய வில்லை. நமக்கு, தீர்மானத்தைப் புறக்கணிக்க, வேண்டாமென்று சொல்ல உரிமையிருக்கும்போது, திருத்தக் கூடாது, சேர்க்கக் கூடாது, மாற்றக்கூடாது என்று சொன்னுல், அதை எங்களாலே

[திரு. ஆலடி அருணு] [1975 மே 2

புரிந்துகொள்ள முடியவில்லே. ஸ்பெசிஃபைட் கேஸஸ்—அதற்கு இந்த அவைக்கு உரிமை இருக்கிறது. அரசியல் சட்டத்தை இங்கே திருத்த முயற்சிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லே, இனிஷியேட் பண்ணுகிற உரிமை பாராளுமன்றத்திற்கு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

Parliament has to initiate any amendment to the Constitution. But, our request is to ask the Parliament to accept our amendment.

நம்முடைய திருத்தத்தைப் பாராளுமன்றம் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கான ஒரு திருத்தத்தை இந்த மன்றத்தில் முன்மொழிந்து ஏற்றுக்கொள்வதிலே என்ன தவறு இருக்கிறது? நம்முடைய விதி 142 ஜனநாயகத்தைப் பாதிப்பதாக இருக்கிறது, உரிமையை பாதிப்பதாக இருக்கிறது. அதைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, a similar situation arose in the Rajya Sabha when the hon. Member, Thiru Bupesh Gupta moved an amendment to this Constitution Amendment Bill. That amendment was with regard to a particular clause giving *carte blanche* powers to the Governor. That amendment was admitted, discussed and finally voted out on the basis of majority vote but not on the basis of non-admissibility. So, that amendment was discussed and the Hon. Thiru Y. B. Chavan replied to it and then it was put to vote. Therefore, I personally feel that it would be perfectly right for this Assembly to discuss any amendment moved to this Bill till the latter becomes a part of the Constitution. This can be accepted or changed by the Parliament. So, this aspect of the matter has to be carefully considered by the Hon. Speaker.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, with regard to the point raised in the House, I would like to offer my remarks. So far as the procedure that has been contemplated under Article 368 of the Constitution is concerned, this House has got the option either to ratify or reject the Bill. I think the rules as framed by us are specific on this matter. We are governed by Chapter XIV (A) of the Rules. Rule 142-C (3) says—

'No amendment shall be proposed to such a resolution'. Now, whether we would be in order to propose an amendment to the Resolution moved by the Hon. Leader of the House, is a moot

1975 மே 2] [Thiru R. Ponnappa Nadar]

question. I think that so far as the amendment is concerned, it may be out of order because the initiative has to be taken by the Parliament and we, as a State Legislature, have no power as per rules and as per the powers conferred under the Constitution with regard to the proposing of amendments. We have either to ratify or reject it. These are the only two options at our disposal. I think no amendment can be moved and that is the point which I want to bring before this House.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னுல் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த நிலையை ஓரளவு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக இருக்கக்கூடிய பகுதியே 368 தான். அந்த 368-ன்படி நாடாளுமன்றத்திலே அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக வழி வகுத்திருக்கிறார்கள். அந்த மாதிரியாக அவர்கள் திருத்துகிற பொழுது, சாதாரணமாக ஒரு மசோதாவை எப்படி நிறைவேற்றுகிறோமோ அந்த மாதிரி நிறைவேற்ற முடியாத நிலைமையிலே அங்கே வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினராவது அதை ஆதரித்து ஓட்டளிக்கவேண்டுமென்றும் மொத்தமிருக்கக்கூடிய உறுப்பினர்களில் பாதிக்கு அதிகமாக ஓட்டளிக்கவேண்டுமென்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அம்மாதிரியான திருத்தத்தைச் சாதாரணமாக இரு சபையில் ஏதாவது ஒரு சபையில் கொண்டுவரலாம். அதை அரசாங்கம்தான் கொண்டு வரவேண்டுமென்ற நிலையில்லை, தனிப்பட்டவரே கூட கொண்டு வரலாம். உதாரணமாக, ஜனுதிபதி இரண்டு தடவைக்கு மேல் இருக்கக் கூடாது என்ற அரசியல் சட்டத்தின் திருத்தத்தையே தனியார் திருத்தமாக, பூபேஷ் குப்தா அவர்கள்தான் ராஜ்ய சபாவில் கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு வந்த பிறகு, இரு சபைகளும் அதை ஏற்றுக்கொண்டு, இந்த அமைப்பின்படி, அது நிறைவேற்றப்பட்டது. அந்தச் சமயத்தில் கூட ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தை அரசாங்கம் கொண்டு வந்தால் அதற்குத் திருத்தம் கொண்டு வரலாமா என்பது விவாதிக்கப்பட்டது. ஆனுல், தனியார் கொண்டு வந்ததையே ஏற்றுக்கொள்ளும்போது, அரசாங்கமே திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த முறையில்தான் கவர்னருக்கு அதிக அதிகாரம் கொடுத்திருப்பது தவறு என்று பூபேஷ் குப்தா அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

ஆனால், சில திருத்தங்களைப் பொறுத்தவரையிலே 368-லே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'. . . the amendment shall also require to be ratified by the Legislatures of not less than one-half of the States by resolutions to that effect passed by those Legislatures before the Bill making provision for such amendment is presented to the President for assent.'

ஆக, இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்திற்கு நாம் உடனடியாக திருத்தமாகக் கொடுக்காமல் போனால்கூட, இந்தத் தீர்மானத்தைப் பற்றி பேசும்பொழுது, ஏற்கெனவே திருத்த மசோதாவில் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச்சொல்ல இது வந்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தாங்கள் தடுக்கமுடியாது. அந்த அளவுக்குத் தாங்கள் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இப்பொழுது, நம் முன்னால் இருப்பது பாராளுமன்றத்திலே, நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தை நாம் அங்கீகாரம் பண்ணுவதா, இல்லையா என்பதுதான்—நம் முன்னால் இருக்கிற பிரச்சினை. பாராளுமன்றத்திற்குத் தான், கான்ஸ்டிட்யூஷனுக்கு—அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் செய்யக்கூடிய உரிமை உண்டு. ஆகவே, அந்த உரிமையை வைத்து, இந்த கான்ஸ்டிட்யூஷனல்—அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை ராட்டிஃபை பண்ண நம் முன்னால் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக எந்தவிதமான கருத்துக்களையும் சொல்லலாம். ஆனால், அதிலே திருத்த தீர்மானத்தை இந்தச் சபையில் கொண்டு வர முடியாது. ஒன்று, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்கவேண்டும். இதன் பேரில் எந்த ஒரு திருத்தத்தையும் புகுத்துவது பொருத்தமற்றது. அது மாதிரி செய்ய இயலாது. ஆகவே, திருத்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்திலே வேறுபட்டால், ரெசலூஷன் கொடுக்கலாம். இந்த அவைக்கு அதை விவாதிக்க உரிமையிருக்கிறது. ஆனால் இந்தத் தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய நிலைமை.

1975 மே 2] [Thiru R. Ponnappa Nadar]

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, in support of the resolution that has been tabled by the Hon. Leader of the House. I would like to offer a few remarks regarding this matter, viz., Constitutional amendment.

So far as this Constitutional amendment is concerned, it is a welcome measure and every democrat will be elated at this joyous thing because certain countries have expressed a note of dissent and I do not want to mention names now. Certain countries especially China, if I remember right, have said that we had frightfully occupied Sikkim. It is a blatant lie and I would in this connection emphasise and reiterate that the procedure that has been followed is truly democratic and there is nothing at variance with the accepted procedure that has been followed. The will of the people and sovereignty of the people has been established. It is a triumph of democracy. That is the most important thing we will have to consider.

So far as this amendment is concerned, it has already been passed by Parliament and we are here to ratify it. Before ratifying I would like to offer certain remarks regarding this important resolution.

Sir, the people of Sikkim had an aspiration that they should form part of India and that they should join the mainstream of Indian politics. It is with that object in view that the various treaty relationships were concluded and finalised. The Chogyal or Prince or King could not accept the democratic traditions and principles that have been adumbrated and so much so there nas been a rivalry between the Monarch and the people.

So far as Sikkim is concerned, it has got a peculiar tradition and history of its own. It is part of India even though it may be originally termed as protectorate. It formed part of India and it is an integral part of the Indian Union for all intents and purposes. We can see that democratic processes ultimately succeeded and this resolution has now come before us and I think we will have to accept this resolution in an elated mood.

So far as the resolution is concerned, how Sikkim wanted to join us is a matter of history. The Institution of Chogyal or Kingship' has been abolished and the resolution to that effect has been passed and finally a referendum has been held on 14th

[Thiru R. Ponnappa Nadar] [1975 Ma 2

April 1975. It is as a result of that that the present legislation has been passed by Parliament and so much so we will have to accept it.

So far as the Bill that has been passed is concerned, there are some significant changes in the Constitutional set up and it may be said that India Government has set the thing in motion and Sikkim is to be added as the 22nd State of the Indian Union. Perhaps it may be pertinent to point out that the overwhelming vote of the people of Sikkim was in favour of joining India and that is stated in the Statement of Objects and Reasons that has been printed. In the votes in the referendum, 59,637 were in favour and 1,496 against, the resolution, out of the total electorate of 97,000. That is the percentage of figures. Referendum is the most democratic way to find out the will of the people and that procedure has been scrupulously followed and in that referendum the vote was overwhelmingly in favour of joining India. There is no outside interference, no coercion or anything. It is the free will of the people and that has been expressed by referendum held on 14th April 1975.

I think this is a smooth and welcome piece of legislation because traditional monarchy has been abolished and it may be urged that there are certain difficulties in the matter of coming into force of this legislation. The Chogyal's rights have not been fully abolished. That is one view that has just been propagated. I do not agree because this gives retrospective effect and in a legislation of this nature we will have to take into account the rights of the people, and the aspirations of the people. I think the India Government was well advised in taking such a wise decision.

Sir, there are outstanding problems and these problems have not been resolved. We have got some grouse with the problem of Kachatheevu. Our grouse is that it had not been handled with the care it deserved. It has almost been handed over to Ceylon and the people of Tamil Nadu have got a grouse that the problem has not been handled with care. But so far as Sikkim is concerned, it is entirely different. It may be said that India Government is taking steps to see that this problem is given the utmost weight and finality should be achieved. It is with that object that the matter has been resolved and this is a welcome measure.

1975 மே 2] [Thiru R. Ponnappa Nadar]

So far, the big powers have not made any comment and only China has made certain observations. China's claims over Tibet are well-known and probably we, also, in a way are responsible for the Tibetan debacle. Our Government at that time supported the stand taken by China. I do not want to go into that length. But suffice it for me to say that that is a thing which has been finally settled. We need not rake it up.

So far as other big powers are concerned they have not made any remark or comment. But the press in those countries seem to think we have just added on Sikkim to us, in an arbitrary manner. It is legally untenable to say so. Referendum has been held and in pursuance of that Sikkim has been added as part of India. Sikkim has been given one seat in the Upper House and one seat in Lok Sabha. The legislature there is also functioning under democratic process. Various safeguards have been given. This amendment has to be accepted and ratified by us. It is an important measure.

So far as our party is concerned, we welcome this Constitutional amendment and we welcome this measure. I once again commend this for acceptance of this House. We shall not question the integrity of India. We welcome Sikkim into Indian Union. The will of the people and the democratic rights of the people will have to be protected. That has been done in the case of Sikkim. This legislation is welcome and it is a land-mark in the history of India. With these words, let me conclude, Sir.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னுலே இருக்கின்ற இந்த அரசியல் சட்டத் திருத்தத்திற்கான ஒப்புதலைக் கோரி வந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இமயமலைப் பகுதியிலே இருக்கின்ற சிக்கிம் ஒரு தனி நாடாக இருந்து 1861-ம் ஆண்டில் நடைபெற்றுக்கொண்டிருந்த பிரிட்டிஷ் ஆட்சியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி பிரிட்டிஷ் பாது காப்பைப் பெற்ற நாடாக மாறியது. அதற்குப் பிறகு கொஞ்சம் அது தன்னுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்கிறது என்று வைத்துக் கொண்டாலும்சரி, அல்லது டெல்லி ஆட்சியோடு சேருவதற்கு நெருங்கி வந்துகொண்டிருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும்சரி,

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 மே 2

அந்த அடிப்படையிலே 1973-ம் ஆண்டிலே இந்தியாவோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி ஒரு அடிப்படை அப்போது போடப் பட்டது. அதன்படி அங்கே நடைபெறுகிற தேர்தல்களை மேலாதிக்கம் செய்யக்கூடிய அல்லது மேற்பார்வைசெய்யக்கூடிய உரிமை இந்தியா விலே இருக்கக்கூடிய தேர்தல் கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு அங்கே இருக்கின்ற நிர்வாகக் குழுவின் தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகாரம் இந்திய அரசுக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு சென்ற வருடம் டிசம்பர் மாதம் 36-வது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி இந்தியாவுடன் சேர்ந்த ஒரு கூட்டு நாடாக அது இந்திய அரசியல் சட்ட வரம்பிற்குள் ஒரு நாடாக அமைந்தது. அதற்குப் பிறகு இந்தியாவிலுள்ள மாநிலங்களில் ஒரு மாநிலமாக அந்தஸ்து பெறக்கூடிய முறையில் இந்தியாவினுடைய 22-வது மாநிலமாக இன்றைக்கு அது மாறியிருக்கிறது.

[முற்பகல் 10-30]

சிக்கிம் நாட்டு மக்கள் இந்தியாவினுடைய ஜனநாயக அரசை ஏற்று, இந்தியாவிலே நடைமுறையிலே இருந்து வரும் முற்போக்குத் திட்டங்களின்மீது நம்பிக்கை வைத்து 22-வது மாநிலமாக நாங்கள் உங்களோடு வந்து சேருகிறோம் என்ற அடிப்படையில் தேர்தலையும் நடத்தி அவர்கள் தங்கள் விருப்பத்தை உலகிற்குத் தெரிவித்து இன்றைக்கு நம்மோடு இணைகிறார்கள். அப்படி வந்து சேரும் சிக்கிம் நாட்டு மக்களைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

.

ஆனால், அதே நேரத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக மாநில சுயாட்சி பற்றி பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடந்தது. தலைவரவர்களுக்கே, இது சட்டமன்றமா அல்லது பட்டிமன்றமா என்ற அளவிற்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். பல்வேறு சந்தர்ப் பங்களில் அந்தக் கருத்துக்களைப் பேசினார்கள். அந்த அடிப்படையில் நான் இன்றையதினம் முதலமைச்சரவர்களிடத்தில் சில கேள்விகளைக் கேட்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறேன். டெல்லி பாராளுமன்றத்திலே 36-வது அரசியல் சட்டத் திருத்தம் வந்த நேரத்திலே கூட்டு நாடாக சிக்கிம் அமையும் என்று சொன்னார் கள். இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் மதிப்பிற்குரிய திரு. செழியன் அவர்கள் இதே அந்தஸ்தைத் தமிழ்நாட்டிற்கும் தர

1975 மே 2] [திரு. செ. அரங்கநாயகம்]

வேண்டுமென்று கேட்டார்கள். அப்படிக் கேட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு 38-வது அரசியல் சட்டத் திருத்தத்தை எந்த அடிப்படையில் வரவேற்கிறது என்பதை மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஒப்புதல் கோரி வந்திருக்கும் தீர்மானத்தை ஒப்புதலுக்காக முன்மொழிந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு இதற்கு முன்பு 36-வது சட்டத் திருத்தத்தை ஏன் இந்த அவைமுன் கொண்டு வந்து ஒப்புதலுக்காக வைக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அப்படிக் கேட்பதற்கு ஒரேயொரு காரணம், மாநிலங்கள் ஒப்புதல் தர வேண்டுமென்ற கருத்தை அரசியல் சட்டத்திலே வைத்திருப்பதை, கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக்கொள்கிறோம், கூட்டாட்சியை ஒப்புக்கொள்கிறோம், அதற்கு ஆதரவு கொடுக்கிறோம் என்ற அடிப்படையில் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியாவிலே வேறு எந்த மாநிலம் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும் தமிழ்நாடு அதைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அத்தகைய நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏன் தவறியது என்பதற்குப் பதில் தர வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றையதினம் நம் முன்னாலே வைக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தைப் பார்க்கும்பொழுது அதிலே தமிழ் நாட்டிற்குத் தரப்பட்டிருக்கும் அதிகாரங்களைவிடக் குறைந்த அளவிற்கு அதிகாரங்கள்தான் சிக்கிம் நாட்டிற்குத் தரப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கவர்னருக்கு அதிக அதிகாரங்கள் என்ற போர்வையில் மத்திய அரசின் ஊடுருவல் இருப்பதாகப் பார்க்கிறேன். ஆகவே, இதைத் திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்து இருக்கும் நேரத்தில் இதில் அவர்களுடைய கருத்து என்ன என்பதை மன்றத்திற்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒப்புதல் தருவது என்பது இன்றைக்குப் பெயரளவிற்குத்தான் இருக்கிறது என்ற உண்மையை நாம் என்றைக்குமே மூடி மறைக்க முடியாது. 24-வது சட்டத் திருத்தம் என்றைக்கு வந்து தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதோ அன்றைக்கே

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 மே 2

மாநில அரசின் ஒப்புதல் தரும் உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது என் பதை முதலமைச்சர் ஒப்புக்கொள்ள வேண்டும். 25-வது சட்டத் திருத்தத்தை மாநிலங்களுக்கு அனுப்பலாமா என்ற பிரச்சினை வந்த நேரத்தில் மத்திய மந்திரிசபை 5 சட்ட நிபுணர்களோடு, மோகன் குமாரமங்கலம், கோகலே போன்றவர்களோடு கலந்து பேசி, தேவையில்லை என்ற கருத்துக்கு வந்த பிறகு, இருந்தாலும் இருக் கட்டும் அனுப்புவோம் என்ற அடிப்படையில் 25-வது சட்டத் திருத்தம் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. இன்றைக்கு இந்தச் சட்டசபையின் முன்னுல் இருக்கும், ஒப்புதலுக்கு வந்திருக்கும் இந்த சட்ட முன்வடிவை நீங்கள் பார்த்தால், இது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடனேயே சட்டமாக ஆகும் ஒரு ஷரத்து இருக் கிறது. ஆகவே, மாநிலங்களின் ஒப்புதல் தேவை இல்லை, ஜனுதிபதியின் கையெழுத்து தேவையில்லை என்ற அர்த்தம்பொதிந்த நிலையையும் இந்த மசோதாவிலே இணைத்திருக்கிறார்கள். அப்படி யென்றுல் மாநிலங்களின் அந்த உரிமை எந்த அளவிற்குப் பறிக்கப் பட்டிருக்கிறது? இதற்கு என்ன விளக்கத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தர இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் இந்தச் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, அவை முன் வந்திருக்கின்ற இந்த சிக்கிம் மசோதாபற்றிய ஒப்புதலுக்கான தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்தைத் தெரிவிக் கும் நேரத்தில் இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிறது என் பதைச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மாண்புமிகு சபாநாயகரவர்களே, அவைமுன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள அரசியல் சட்டத் திருத்தத்தினுடைய தீர்மானத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இந்தியாவினுடைய வடகிழக்கு எல்லையாக இருக்கும் மலைப்பிர தேசமான சிக்கிம் பிரதேசம் நம்முடைய நாட்டோடு, பிரதேசத் தோடு இணைகிறது என்று அறிந்து, இதற்காக ஒத்துழைத்த சிக்கிம் நாட்டிலே உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கும், இந்திய அரசாங்

1975 மே 2] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கத்திற்கும், குறிப்பாக இந்தியாவினுடைய பிரதம அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய பாராட்டுதலை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமக்கெல்லாம் இந்தியாவினுடைய படத்தைப் பார்க்கும் சமயத்திலே சிக்கிம் என்ற ஒரு சிறிய எல்லைதான் தெரியும். ஆனுல் அதன் முக்கியத்துவம், அது இந்தியாவின் பாதுகாப்பிற்கு எப்போர்ப்பட்ட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பது அங்கே சென்று பார்த்தவர்கள்தான் மிகவும் நன்முக அதனை உணர முடியும். சீனுவினுடைய பக்கத்திலேயும், இந்தியாவிற்கும், சீனுவிற்கும் தரை மார்க்கமாக வரும் வழியாகவும் இருக்கும் மிக முக்கியமான நத்துலா, ஜேலா, ஜொலக்லா என்ற மூன்று கணவாய்களும் சிக்கிமின் வட பகுதியில் இருக்கின்றன. 1963-ஆம் ஆண்டுக்குப் பிறகு சீனு இந்தியாவை, குறிப்பாக இந்திய பூபாகங்களை ஆக்கிரமிக்க வேண்டுமென்று முயற்சித்த நேரத்தில் அவர்கள் அந்த சிக்கிம் மூலம்தான் தங்களுடைய துருப்புகளையெல்லாம் அனுப்ப முயற்சி செய்தார்கள். சிக்கிமுக்குப் பக்கத்தில் இருக்கும் தும்பிவேலி என்று சொல்லப்படும் இடத்தில் இன்றைக்கும் சீனு ஏறக்குறைய 40 டிவிஷன்கள் ஆர்மியை வைத்திருக்கிறது.

இமயமலையிலே 3,000 அடி உயரத்திலே, ஆரம்பித்து ஏறக்குறைய 18,000 அடி வரையிலே இருக்கும் அந்த மலைப்பிரதேசம்தான் சிக்கிம் ஆகும். அங்கேயுள்ள மக்கள் இரண்டு அல்லது மூன்று லட்சம் தொகைதான் இருக்கிறார்கள். இருந்தாலும் சீனு ஏற்கெனவே ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும், இந்தியாவை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டுமென்று முயற்சி செய்த சமயத்தில் நக்சல்பாரி இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். சில்கிரி, நக்சல்பாரி என்ற இடங்களில் டீஸ்தா நதிக்கரைக்குப் பக்கத்தில் சீனுவின் ஏஜண்டாக இருக்கும் சில அரசியல்வாதிகள் நக்சல்பாரி என்ற ஊரில் பெரும் புரட்சி செய்தார்கள். அதைத்தான் நக்சலேட் என்று சொல்கிறோம். நக்சல்பாரி என்ற இடத்தில் தொடங்கியதால் அப்படிச் சொல்கிறோம். மாசேதுங்கின் கோஷ்டியினர்தான் அந்த இடத்திலே இந்தியாவைத் துண்டு போட வேண்டுமென்பதற்கு உதவிகரமாக இருந்தார்கள். சீனுவின் ஆக்கிரமிப்பு எண்ணம், முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இன்றையதினம் அசாம், மணிபுரா, திரிபுரா, அதேபோல் நேபா, நாகலாந்து போன்ற ஏரியாக்கள் இந்தியாவின் இந்தப் பக்கத்தி

லிருந்து வெட்டப்பட்டிருக்கும். இன்றைக்கு பங்களாதேஷ்ஆக இருக்கும் எல்லையையும், ஒரு பக்கத்தில் நேபாள எல்லையையும் வங்காள மாநிலத்தில் டார்ஜிலிங் டிஸ்டிரிக்ட்டில் பிரிக்கும் அளவிற்கு ஏறத்தாழ 40 மைல் அளவில் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் நக்சல்பாரி இயக்கம் தோன்றியதற்கு முழுமுதல் காரணம், சீனுவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான். பாராளு மன்றக் குழு ஒன்றை டிஃபென்ஸ் ஏரியாவில் பிரிப்போர்ட்னெஸ்ஸைப் பார்ப்பதற்காக அனுப்பினர்கள். நாங்கள் சிக்கிமில் ஒரு வாரம் இருந்து ஒவ்வொரு பகுதிக்கும் சென்று பார்த்தோம். நம்முடைய எல்லையிலே உள்ள நம்முடைய இராணுவ வீரர்கள், தமிழ் மக்கள், இன்னும் சொல்லப்போனுல் நாகப்பட்டினம் பகுதியைச் சேர்ந் தவர்கள், சேலம் பகுதியிலேயிருந்து சென்றவர்கள், 16,000 அடி, 17,000 அடி உயரத்தில் நத்துலா, ஜொலக்லா போன்ற கணவாய் களில், சீனுக்காரர்களுக்கும், அவர்களுக்கும் 10 அடி தூரங்கூட இல்லாமல் இரவும் பகலுமாக இந்த நாட்டைப் பாதுகாத்து வருகிறார்கள்.

சீனு சிக்கிமில் இருக்கும் சில ஏஜண்டுகளைப் பிடித்து சிக்கிமை சீனுவுடைய ப்ரொட்டெக்டரேட் ஏரியாவாக ஆக்க வேண்டும்; அப்படி ஆக்கிய பிறகு அவர்கள் வெகு எளிதாக, தும்பிவேலியில் வைத்திருக்கக்கூடிய 40 டிவிஷன் ஆர்மியுடன் இந்தியாவுக்குள் நுழைந்து அதன் காரணமாக மிக முக்கியமான ஐந்து மாகாணங் களைக் கொண்ட ஈஸ்டர்ன் இந்தியாவைப் பிடித்துக்கொள்ள ஏற்கெனவே இருந்த கிழக்கு பாகிஸ்தான் உதவியோடு முயற்சித்தார் கள். பல ஆயிரக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயை இந்தியா வின் பாதுகாப்புக்காகச் செலவழித்துக் கொண்டிருக்கும் இந்த நிலை யில் மிக முக்கியமான பகுதியான சிக்கிம் நம்முடைய மாநிலமாக, இந்தியாவின் பிரதேசமாக வருகிறது.

இது கன்னியாகுமரியிலிருந்து சிக்கிம் வரை இருக்கக்கூடிய ஒவ் வொரு இந்தியக் குடிமகனும் சிக்கிம் இந்தியாவோடு சேர்ந்திருப் பதைப் பெருமையாகக் கூற முடியும். அப்போர்ப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த, டிபென்சுக்கு முக்கியத்துவம் வாய்ந்த, இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக சிக்கிம் இருக் கிறது. அமெரிக்கர்களும், சீனுக்காரர்களும் இந்தியாவின் மீது வைத் திருக்கும் அக்கறை சொல்லாமலே விளங்கும். அவர்கள் எப்படி

1975 மே 2] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

யாவது இந்த சிக்கிம் இந்தியாவோடு சேரக்கூடாது என்பதற்கு முயற்சி எடுத்தார்கள். இன்றையதினம் ரஷ்யா சிக்கிம் இந்தியாவோடு சேர்ந்ததைப் பற்றிக் குறைவாகச் சொல்லவில்லை. சீனதான் சொல்லிக் கொண்டிருக்கிறது. அவர்கள் சிக்கிமைக் காயாக வைத்து இந்தியாவைப் பிடிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இன்று அந்த வாய்ப்பு போய்விட்டதே என்று துயரக் கண்ணீர் வடிக்கிறார்களே தவிர வேறல்ல.

இவ்வளவு முக்கியமான, இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் தேவையான, அத்தியாவசியமான ஒரு காரியத்தை நல்ல திறமையோடு சாதுரியத்தோடு பொலிடிகல் மெச்சூரிடியோடு சிக்கிமை இந்திய மாநிலங்களில் ஒன்றுகச் சேர்ப்பதற்கு முயற்சி செய்த இந்திய அரசாங்கத்தை, குறிப்பாக பாரதப் பிரதமரைப் பாராட்டி தீர்மானத்தை வரவேற்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக இதை முழு மனதாக வரவேற்கிறேன்.

இந்திய அரசாங்கத்திடம் அல்லது இந்திய அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் கட்சிகளிடம் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இந்தியாவினுடைய வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் எப்போதுமே இந்திய அரசாங்கம் எடுக்கிற முடிவுகளை முழு மனதாக ஆதரித்து வந்திருக்கின்ற காயிதே மில்லத் அவர்களுடைய பாரம்பாரியத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழு மனதாக வரவேற்கிறோம்.

சிக்கிம் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னர்கள். சிக்கிமை நாம் இன்றைக்கு இணைத்துக் கொண்டிருக்கிறோம் என்றால் மக்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் அந்த இணைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு உலக அரங்கில் ஒருசில

[திரு. எம். ஏ. லத்திப்] [1975 மே 2

நாடுகள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. அவர்கள் உணர்ந்தாக வேண்டும்—பல்வேறு கட்டங்களிலேதான் இந்த இணைப்புக்கான காரியம் நடந்திருக்கிறது.

கடந்த காலத்தில் கூட சிக்கிம் இந்தியாவினுடைய ப்ரொட்டெக் டரேட் என்ற அந்தஸ்தில் இருந்து வந்திருக்கிறது. சிக்கிமை அந்த நிலையில் வைத்துத்தான் இந்தியாவினுடைய வெளிநாட்டுக் கொள்கை களை வகுக்கக்கூடிய, வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு அரசாங்கமாகத்தான் இந்திய அரசு இருந்து வந்திருக்கிறது. இப்போது நடந்திருப்பது என்னவென்றுல் வெளிநாட்டுத் தொடர்பு களோடு உள்நாட்டு விவகாரங்களையும் இந்திய அரசாங்கமே, தனி யாக அந்த சிக்கிம் நாட்டுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் மக்களுடைய அரசாங்கம் வாயிலாக நடத்தும் என்ற அளவுக்குத்தான் நிலைமை மாறியிருக்கிறதே தவிர, திடீரென்று சிக்கிம் நாட்டை இந்திய அரசாங்கம் இணைத்துக் கொண்டது என்பது அல்ல.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சிக்கிம் மக்கள் இந்தியா வோடு இணையவேண்டும், இந்திய பூபாகத்திலே இருந்து கொண்டே பிரிந்திருக்கின்ற நிலையை மாற்ற வேண்டுமென்று விரும்பினர்கள். அதனுடைய அடிப்படையிலேதான் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பல சட்டங்களை இயற்றினர்கள். சமீபத்தில்தான் அதற்கு இந்தியா வோடு இருக்கக்கூடிய அசோஷியேடெட் ஸ்டேடஸ்—அசோஷியேட் ஸ்டேட் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டது. இறுதியில் 1973-ஆம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி அந்தப் பகுதியினுடைய மன்னராக, ஆட்சித் தலைவராக இருந்த சோக்கியாலோடு ஓர் உடன்பாடு செய்யப்பட்டது. அந்த உடன்பாட்டின் அடிப்படையில், சோக்கியால் மக்களுடைய ஜனநாயக அபிலாஷைகளுக்கு மதிப்புத் தரவேண்டும்; மக்கள் தேர்ந்தெடுக்கின்ற ஆட்சியின் வாயிலாகத்தான் அந்தப் பகுதி யின் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்ற ஒரு உடன்பாடு செய்யப்பட்டது. ஆனல் துரதிருஷ்டவசமாக சோக்கியால் தாமாகவே செய்து கொண்ட உடன்பாட்டை மீறிய காரணத்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும், மக்களுடைய பிரதிநிதித்துவ சபையாக இருந்த சட்டமன்றமும் தீர்மானித்து எடுத்துக் கொண்ட முடிவுகளுக்கு விரோதமாக நடந்து கொண்ட காரணத்தாலுந்தான் சிக்கிமில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை அண்மையில் நிறைவேற்றியது. அதன்வாயிலாக

1975 மே 2] [திரு. எம். ஏ. லத்தீப்]

சிக்கிம் இந்திய யூனியன் பகுதியாக ஐக்கியப்படுத்தப்பட்டு, இணைக்கப் பட்டு மற்ற 21 மாநிலங்கள் எந்த அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றனவோ அதே அந்தஸ்து சிக்கிம் பகுதிக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

சிக்கிம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை முடிவு எடுத்தது. அந்த முடிவின் அடிப்படையில் இந்திய அரசாங்கம் பல் வேறு தன்மைகளை ஆராய்ந்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுடைய நன்மைகளை உத்தேசித்து அவர்களுடைய கருத்துக் களுக்கு இணங்க பாராளுமன்றத்தில் 38-வது திருத்தத்தைக் கொண்டு வந்து மேலவையிலும், மக்கள் அவையிலும் அதை நிறைவேற்றி இன்றைக்கு நம்முடைய அவையின் ஒப்புதலுக்காக வைத்திருக் கிறார்கள்.

இங்கே சில சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. இந்த ஒரு தீர்மானத் திலாவது சர்ச்சைக்குரிய விஷயங்கள் பேசப்படாமல் இந்த நல்ல வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தத்தை முழு மனதாக ஆதரிக்கிற வகை யில் பேசுவோமானால் அது நலமாக இருக்கும். சீனக்காரர்களைப் பொறுத்தவரை ஐக்கிய நாட்டு சபையில்கூட "இந்தியாவினுடைய ஆக்கிரமிப்பு" என்ற வகையில் சில பிரசுரங்களை வெளியிட்டு ஐக்கிய நாட்டு சபை உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்தார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. இதை எதிர்த்து, கண்டித்து நம்முடைய மத்திய அரசு வெளிநாட்டுத் துறையின் சார்பாக மிகப் பெரிய கண்டனத்தை, மறுப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மறுப்பை, கண்டனத்தை ஏதோ சர்க்கார் தரவேண்டுமென்ற அளவில் இல்லா மல், இந்த நாட்டில் இருக்கக்கூடிய 60 கோடி மக்களுடைய ஒருமித்த கருத்து என்ற அளவுக்கு எடுத்துக்கொண்டாக வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளாமல் அவர்கள் இந்தியாவை எதிர்க்க வேண்டு மென்பதற்காக, சர்வதேச அரங்கில் இந்தியாவுக்குக் களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அளவில் நடந்து கொண்டு வருவார் களானால் நான் அவர்கள் மீது அனுதாபப்படுகிறேன்; கடைசியாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடியது ஏமாற்றமாகத்தான் இருக்கும்; எந்த நோக்கத்திற்காக எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறுமல் ஏமாற்றந்தான் பெறுவார்கள். ஆகவே, இன்று இது இந்திய மக்கள் தெரிவித்த கருத்து என்ற வகையில் அவர் கள் எடுத்துக் கொண்டாக வேண்டும். நாம் இங்கே பேசக்கூடிய பேச்சு விரோதிகளுக்கு வலுவூட்டக்கூடிய வகையில் இல்லாமல்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மே 2

இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த விஷயத்தில் பேசுகின்ற வர்கள் மிக எச்சரிக்கையோடு பேசவேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன்.

சிக்கிமுக்கு அசோஷியேடெட் ஸ்டேட்டஸ் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்ட நேரத்தில் சிக்கிமுக்கு அப்படி ஸ்டேட்டஸ் கொடுக்கப்படும்போது தமிழ் மாநிலத்திற்கும் ஏன் கொடுக்கக்கூடாது என்ற வகையிலே அந்தக் கோணத்திலே ஒரு கருத்து கூறப்பட்டது. இன்று அதை இந்திய யூனியனோடு ஐக்கியப் படுத்தக்கூடிய மசோதா ஒன்றைச் சட்டத் திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நிராவிட முன்னேற்றக் கழகம், அன்று அந்த வாதத்தை வைத்தது, இன்றைக்குத் தீர்மானமாக முன்மொழி கிறதே, இது வேடிக்கையாக இல்லையா என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது.

அது வேறு பிரச்சினை. நான் சொல்வதெல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கும்போது இன்றைக்கு 21 மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கேட்கக் கூடிய உறுப்பினர்களாக இருக் கிறார்கள். அதிக அதிகாரங்களைக் கேட்கக் கூடிய ஒரு அங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் இன்று 21 பேர்கள் என்று வைத்துக்கொண்டால் அதிக அதிகாரங்களைக் கேட்கக்கூடிய ஒரு சொசைட்டியில் இன்று இன்னொருவரும் சேர்ந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகி 21 பேர்களுக்குப் பதிலாக 22 பேர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றுல் நாம் அதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, on a point of order, are we discussing State Autonomy or the Resolution on Constitution Amendment?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

THIRU M. A. LATHEEF: We are not only discussing the Resolution, but also the causes which have led to the demand for State Autonomy. It is only a sequence, a culmination of what has taken place in the past two or three years and I am not the first

man to raise this; it had been raised already. Therefore in order to make further clarification, so that we are not misunderstood by outsiders, I am making these observations. Nothing else.

ஆகையினல் இன்றைக்கு 21 பேர்களுக்குப் பதிலாக 22 பேர்கள் சேர்ந்து கேட்கப் போகிறோம். நம்முடைய வாதத்திற்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையில் இன்னொரு மெம்பர் நமக்கு கிடைக்கப் போகிறார். அவர்களும் சேர்ந்து கேட்கப்போகிறார் என்ற அளவிற்கு இதை நாம் நிச்சயமாக ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இன்னொன்றையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும். வட புலத்தில் சீனவின் எல்லையோட்டி இந்தியாவினுடைய பாதுகாப்பில் இருந்த ஒரு தனி நாடு, அந்தத் தனி நாட்டினுடைய ஆட்சித் தலைவர் இந்தியாவிற்கு விரோதமான ஒரு எண்ணத்தை வளர்த்துக்கொண்டு இந்தியாவிலிருந்து பிரிந்து சென்று இந்தியாவின் விரோதியோடு சேர முயற்சி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு இருந்தும் சிக்கிம் பகுதி மக்கள் அப்படி நினைத்த காரணத்தால் தனியாக இருந்த ஒரு நாடு இன்று இந்தியாவோடு ஐக்கியமாகிறது என்று சொன்னல் மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதைத்தான் சாதிக்க முடியும், மன்னர்களாக இருந்தாலும் அவர்கள் நினைத்தது இந்தக் காலத்தில் நடக்காது, இந்த ஜனநாயக யுகத்தில் நடக்காது என்பதை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

சிக்கிம் மக்கள் தாமாகவே விரும்பி வந்தார்கள். தாங்கள் இந்திய நாட்டோடு ஐக்கியமாக வேண்டுமென்று விரும்பினார்கள். ஆக, அவர்களுடைய விருப்பம் நிறைவேறியது. மற்ற மாநில மக்கள் இன்றும் வலியுறுத்திச் சொல்கிறார்கள், இந்திய நாடு ஒன்றே என்று வலியுறுத்திச் சொல்கிறோம். அதே நேரத்தில் மக்களுடைய விருப்பம் என்னவென்றால் மாநிலங்களுக்குப் போதிய அதிகாரங்கள் இல்லை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான் மக்களுடைய விருப்பம். ஆட்சியில் இருப்பவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் மக்களுடைய விருப்பங்களின் அடிப்படையில்தான் திருப்பங்கள் ஏற்படுகின்றன. மக்களுடைய விருப்பங்களின் அடிப்படையில்தான் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை வலியுறுத்தும் வகையில்தான் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மே 2

நிகழ்ச்சி, சிக்கிம் இணைப்பு இந்திய நாட்டோடு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆட்சியில் இருப்பவர்கள், மாட்சிமை பெற்றிருப்பவர்கள், அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று. சிக்கிம் இந்திய நாட்டோடு சேருவதில் இந்திய நாட்டுக்கு எதுவும் நன்மை இல்லை. பாதுகாப்பு நன்மை இருக்கிறது என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். சிக்கிமினுடைய இணைப்பினுல்தான் இந்தியாவிற்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. எத்தகைய எதிர்ப்பையும் சந்திக்கக்கூடிய ஒரு திறமை, திராணி இந்திய நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகையினுல் சிக்கிம் இந்தியாவினோடு சேர்ந்த காரணத்தால் தான் இந்திய நாட்டினுடைய பாதுகாப்பு வலிவு பெறமுடியும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள நான் தயாராகயில்லை. அதற்கு மாறுக சிக்கிம் நாட்டு மக்கள்தான் நமக்கு நன்றி செலுத்தவேண்டும். ஏனென்றுல் நம் இந்தியாவினுடைய பொருளாதார வளத்தை, நம் இந்திய நாட்டினுடைய ஜனநாயக வளத்தை, நம் இந்திய நாட்டினுடைய அரசியல் பண்பாட்டை, நம் இந்திய நாட்டினுடைய நிதியை, வாய்ப்பு வசதிகளை அவர்கள்தான் பயன்படுத்திக்கொள்ளப் போகிறார்கள், பாதுகாப்பைக்கூட அவர்கள்தான் பயன்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

ஆகவே சிக்கிம் நாட்டு மக்கள் நம்மோடு இணைகிறோம் என்று சொல்வது அவர்கள் தங்களுடைய நன்மையை உத்தேசித்துத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். நாமாக சிக்கிம் இந்தியாவோடு இணைய வேண்டும் என்று சொல்லவில்லை. காரணம் இது ஒரு படையெடுப்பினுல் ஏற்படுத்தப்பட்ட இணைப்பு அல்ல. சிக்கிமின் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. சிக்கிமில் ஒரு ரெஃபரன்டம் நடத்தப்பட்டது. சிக்கிம் மக்களின் நோக்கத்தைக் கணிக்கும் வகையில் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் ஒரு உறுதியான தீர்ப்பை அளித்தார்கள், சிக்கிம் இந்திய நாட்டோடு இணைய வேண்டும் என்று. அந்த அடிப்படையில் மிகுந்த யோசனைக்குப் பிறகுதான் சிக்கிம் நாடு இந்திய நாட்டோடு இணைந்திருக்கிறது. வட புலத்தில் உள்ள பல மாநிலங்களுக்கு நாம் சப்சிடி கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

1975 மே 2] [திரு. எம். ஏ. லத்தீப்]

காஷ்மீரை எடுத்துக்கொண்டாலும் சரி, மேகாலயா, அருணுசலப் பிரதேஷ், நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா போன்ற மாநிலங்களுக்கு இன்றைக்கு மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்காத அளவிற்கு மத்திய அரசு அதிகப்படியான நிதியை அவர்களுக்காக செலவழித்துக்கொண் டிருக்கிறது. இந்த பைனன்ஸ் ஸ்டேட்மென்டில் கூட அவர்களுக்கு எவ்வளவு என்று கணிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் பெறுத வசதியை இன்று சிக்கிம் மாநிலம் பெறப் போகிறது. பொருளாதார வளத்தைக் காணப் போகிறது என்ற அளவில் சிக்கிம் மக்கள் மட்டுமல்ல, அந்த நாட்டு மக்களின் மன்னர் என்ற நிலையில் இருந்த மாஜி மன்னர் அவர்கள் கூட நமக்கு நன்றி செலுத்தவேண்டும்.

ஆக, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். சிக்கிம் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைக் கொடுக்கிற வகையில் ஒரு பெரிய தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறோம். அவர்களை நாம் இணைத்துக்கொண்டதன் வாயிலாக நாம் சர்வதேச அரங்கில் நம் அந்தஸ்தை உயர்த்திக்கொண்டிருக்கிறோம். சிறிய நாடுகளை சீனு போன்ற ஏகாதிபத்திய நாடுகள் ஆக்கிரமிப்பு செய்யாத அளவிற்கு, தடுக்கப்படுகிற அளவிற்கு இந்திய நாடு ஜனநாயகத்திற்கு எப்போதுமே துணையாக நிற்கும் என்பதை நாம் இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக உலகத்திற்கு உணர்த்தியிருக் கிறோம். இதைப்புரிந்து கொண்டு சிக்கிம் நாட்டு மக்கள்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களும், அந்த மக்கள் மீது நல்லெண்ணம் வைத்திருப்பவர்களும், சீனு போன்ற நாடுகளும் இதை வரவேற்றுப் பாராட்டவேண்டும். அதற்கு மாறுக அவர்கள் நினைப்பார்களே யானுல் தென் வியட்நாமில் ஏற்பட்ட நிகழ்ச்சிபோல், மக்களின் எண்ணத்திற்கு விரோதமாக யார் நடந்தாலும் அது நிச்சயமாக தோல்விதான் காணும், மக்களின் அபிப்பிராய்ம்தான் வெற்றி பெறும். மாநில சுயாட்சி அல்லது மக்களிடையே ஒரு அபிப்பிராயம் உருவாகி விட்டது என்றுல் அதைத் தடுப்பதற்கு எந்த சக்தியாலும் முடியாது என்பதற்கு இந்தச் சிக்கிம் இணைப்பு ஒரு பாடத்தைக் கற்றுத் தருகிறது. அதை நாமும், இந்த அவையும், இந்த அவைக்கு அப்பாலிருக்கிற அனைத்துக் கட்சிகளில் இருப்பவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று கூறி இத் தீர்மானத்தை வரவேற்றுப் பாராட்டி அமர்கிறேன்.

[1975 மே 2

திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கிற வகையில் இம்மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தின் மீது பேசியவர்கள் சிக்கிம் என்ற நாடு இந்தியாவோடு இணைந்து ஒரு மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆதரவாக இந்தியப் பாதுகாப்பிற்கு அது அவசியம் என்ற முறையில் பேசினார்கள். வட கிழக்கு எல்லையில் நடந்த இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பல. சீனா மிகப் பெரிய நாடு. நம்மை விட மக்கள் தொகையிலும், தரையின் நீள அகல அளவிலும் மிகப் பெரிய நாடு. அந்த நாட்டிலே ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டது. அப்படி ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டு இந்தியாவின் பக்கத்திலே அண்டை நாடாக இருந்து வந்த பூகோள ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும் நெருக்கமாகவும் இணக்கமாகவும் இருந்த திபெத்தின் மீது சீனா திடீரென்று படை எடுத்தது. சீனாவின் ஒரு மாநிலம்தான் திபெத் என்று கூறிக்கொண்டு 18 ஆண்டுகளுக்கு முன்னால் திபெத்திலிருந்து தப்பிச் சென்ற பஞ்சன் லாமாவைப் பிடித்து இவர்தான் உங்கள் தலைவன் என்று அறிமுகப்படுத்தி அவருக்குப் பின்னால் பலதரப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு சென்று திபெத்தைப் பிடித்து ஒரு பகுதியாக ஆக்கிக்கொண்டது சீனா. நாம் அப்படிச் செய்யவில்லை. சிக்கிம் நாட்டு மக்கள் சிக்கிம் நாட்டை இந்தியாவின் ஒரு மாநிலமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்பி வந்து, அதற்கேற்ற வகையில் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி அந்த அடிப்படையில் இந்தியாவின் ஒரு மாநிலமாக அது சேருவதற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

சிக்கிம் என்பது ஏதோ வட கிழக்கு எல்லையில்—இமயமலையில் இருக்கும் சாதாரண நாடு என்று நினைக்கலாம். இந்தியாவின் பாதுகாப்பு என்ற முறையில் பார்த்தால், அது இந்தியாவோடு இணைந்தாலும், இணையாவிட்டாலும், நாம் எந்தச் சக்தியையும் சமாளிக்கலாம் என்ற வகையில் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அவர் எந்த அனுபவத்தின் ரீதியாக, எந்தக் கண்ணோட்டத்தின்

1975 மே 2] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

அடிப்படையில் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் ஒரு இஞ்ச் இடத்தை சீனக்காரனோடு இணைத்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்து இருப்பார்களானால், அது எவ்வளவு பெரிய ஆபத்தை இராணுவ ரீதியில் இந்தியாவிற்கு ஏற்படுத்தியிருக்கும் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பிற்கு காஷ்மீர் எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே வகையிலேதான் சிக்கிமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிக்கிம் மன்னர்—அங்கேயிருக்கும் ஆட்சித் தலைவர்—சீன தேசத்தின் கையாளாக மாறினார். ஆனால் அங்கேயுள்ள மக்கள் மாறவில்லை. காரணம், அவர்கள் இந்திய மக்களின் வாழ்க்கையோடு மிக நெருக்கமாகத் தொடர்பு வைத்துக்கொண்டு இருந்தார்கள். இன்று நேற்று அல்ல, ஆயிரம் ஆண்டுகாலத்திற்கு முன்பிருந்தே வைத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான், அந்த உணர்வின் அடிப்படையில்தான் அவர்கள் இந்தியாவோடு சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு, இந்தியாவோடு சேர்ந்திருக்கிறார்கள். இதிலே இந்தியாவிற்கு லாபம் இருக்கிறதா என்பதை விட, சிக்கிம் நாட்டு மக்கள் இந்தியாவோடு சேர்ந்ததால், இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது என்ற வகையில், இந்தத் தீர்மானத்தை எனது கட்சியின் சார்பாக முழு மனதோடு ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, இம்கே சிக்கிம் நாடு நம்முடைய இந்தியாவுடன் இணையவேண்டும் என்ற அரசியல் சட்டத் திருத்தத்தை அங்கீகரிக்கும் வகையில், இந்தச் சபையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற தீர்மானத்தை ஆழ்ந்த கருத்துடனே வரவேற்று, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சிக்கிம் நாடு நம்மோடு சேர்வதால், பாதுகாப்புக்கு எவ்வளவு உகந்ததொரு நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

[திரு. எம். சுரேந்திரன்] [1975 மே 2

இங்கே எடுத்துக் கூறினர்கள். சாதாரணமாக, பூகோளத்தைப் புரிந்து கொண்டவர்கள் இந்த நிலைமையைப் புரிந்து கொள்வது அவ்வளவு கஷ்டமான காரியமாக இருக்காது என்று கருதுகிறேன். கடந்த காலத்திலே கூட அந்தப் பகுதியில் என்னென்ன நடந்து இருக்கிறது, எப்படிப்பட்ட ஊடுருவலுக்கான வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதற்கான சரித்திரம் இருக்கிறது. ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற நிலைமையில் இந்த மாதிரி, சிக்கிம் மாநிலத்தை நம்முடைய தேசத்தோடு சேருகிற—22-வது மாநிலமாக சேருகிற—ஒரு காரியத்தைச் செய்வது எவ்வளவு முக்கியமானதொரு காரியம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தக் காரியத்தை நாம் முன்னமேயும் செய்து இருக்க முடியும். அந்த நாட்டின் பாதுகாப்பு, அந்த நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை, மற்ற மற்ற அம்சங்களில் எல்லாம் நமக்கு பெரும் பங்கு இருந்தது என்பது அவ்வளவு பேருக்கும் தெரிந்து இருக்கும் ஒரு உண்மையாகும். அப்படி இருக்கும் நிலையில் கூட, அந்த சிக்கிம் நாட்டை நம் நாட்டோடு இணைத்துக்கொள்வது நம் நாடு எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இப்போது, அங்கே இருக்கிற மக்கள் விரும்பிய காரணத்தால், அங்கே இருக்கும் நாட்டுக்குத் தீமை ஏற்படும் என்ற நிலைமை ஏற்பட்டதற்குப் பின்னால், அங்கேயிருக்கும் மக்களாகக் கூடி, ஒரு முடிவை எடுத்து, அதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டதற்குப் பின்னாலே தான், இந்த நாட்டின் அரசு அது பற்றி சிந்தித்து, அந்த நாட்டைச் சேர்த்துச் கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

இதிலிருந்து ஒன்று புரிகிறது. நாட்டிலே இருக்கிற மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும், ஜனநாயகக் கோட்பாடுகளையும் இந்த நாடு எப்படி வரவேற்கின்றது, எப்படி ஏற்றுக்கொள்கின்றது, எத்தகைய மதிப்பு தருகின்றது என்பது எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் கூட ஜனநாயகத்தை மதித்து நடக்கவேண்டும், மக்களின் உணர்வு களை மதித்து நடக்கவேண்டும், அந்த உணர்வு அவ்வளவு பேருக்கும் ஏற்படவேண்டும் என்று கூறினர்கள். இந்தத் தேசத்தில் கூட ஒரு நிலைமையேற்பட்டு இருக்கிறது. ஒரு பக்கத்தில் ஜனநாயகத்தை மதிக்கவில்லை, ஜனநாயகத்தை இழுக்கு செய்கிறார்கள், சர்வாதி

1975 மே 2] [திரு. எம். சுரேந்திரன்]

காரத்தை நோக்கி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் போகிறார் கள் என்று எல்லாம் கூறி ஒரு பேரியக்கம் துவங்கி செயல்பட்டு வரு கிறது, அதிலே இங்கே இருக்கும் ஆளும் கட்சியும் சம்பந்தப்பட்டு இருக்கிறது என்ற நிலைமையைப் பார்க்கிறோம், மற்றொரு பக்கத்தில் ஜனநாயகத்தை மதித்து செயல்படுகிறார்கள் என்று கூறுவதையும் பார்க்கிறோம். இந்த இரண்டையும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்க்கிற நிலைமை இந்தத் தீர்மானத்தின் மூலம் ஏற்பட்டு இருக்கிறது.

அதோடு கூட, நம்முடைய தேசத்திலேயே கூட—இங்கே லத்தீப் அவர்கள் பேசினார்கள்—அந்தந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற எண்ணமானது வளர்ந்து, வலுப்படுகிறது என்ற அளவில், இன்னொரு மாநிலம் சேர்ந்து அதைக் கேட்பதற்கான அடிப்படையிருக்கிறது என்று சொன்னார்கள். இதில் நாம் ஒன்றைப் பார்க்கவேண்டும். இதில் இருக்கின்ற நாடுகள் தனியாகப் பிரிந்து போகிற நிலைமை மாறி, தனியே இருக்கின்ற நாடுகள் முழு அளவில் பெரிய நாடுகளோடு சேர்ந்து கொண்டு, முழு அளவில் அந்த தேசத் தோடு இணைந்து செயல்படவேண்டும் என்ற எண்ணத்தை வெளிப் படுத்தும் அளவில், அந்த நாட்டு மக்கள் இந்தியாவோடு சேர்ந்து இருக்கிறார்கள். அந்தக் காரியத்திற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில், ஆளும் கட்சியினர் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துக்கொண்டு வந்து இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது, அதற்காக முன்னதாகவே சட்டசபையைக் கூட்டி, கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதைக் காணுகிறபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நாம் இன்னொன்றையும் பார்க்கிறோம். இந்த தேசத்தின் பாதுகாப்புக்கு எந்த வகையில் நாம் சிறப்பான காரியங் களைச் செய்துவந்துகொண்டு இருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். பாகிஸ்தான் சண்டையேற்பட்டபோது, பங்களா தேஷ் ஏற்பட்டபோது, நாம் எந்த அளவுக்கு பாதுகாப்பு வளர்ச்சிக்கான காரியங்களில் ஈடுபடவேண்டும் என்பதை உணர்ந்து கொண்டோம். அதற்கு முன்னாலேயே நமக்கு அந்த எண்ணம் இருந்தது. சீனா நம்முடைய நிலத்தைப் பிடித்துக்கொண்ட பின்னால், நாம் எவ்வளவு அக்கறையோடு, கவலையோடு, எல்லைப் பாதுகாப்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது. உலகத்திலேயே பெரிய வல்லரசான அமெரிக்கா தன்னுடைய படை பலத்தைக் காட்டி, பங்களா தேஷைப் பிடித்து விடலாம். இந்தியாவை மிரட்டி

[திரு. எம். சுரேந்திரன்] [1975 மே 2

விடலாம் என்று முயற்சி செய்தது. அவர்களுடைய முயற்சியை முறியடித்ததை அடுத்து, உலக அரங்கிலேயே நமக்கு நல்லதொரு நிலைமையேற்பட்டது. பெரிய வல்லரசுகளே ஓடுகிற நிலைமையேற் பட்டதற்குப் பின்னுலேதான், வியட்நாம் போன்ற நாடுகளில் இருந்தும், கம்போடியா போன்ற நாடுகளில் இருந்தும் ஓடுகிற நிலைமையேற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஒரு இடத்தில் ஏற்படுகிற சம்பவமானது, உலக அரசியல் விவகாரங்களில் பல விதத்தில் மாற்றங்களே ஏற்படுத்த வழிகோலிடுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். இந்தியாவும் அணு குண்டு சோதனை நடத்தியும், ராக்கெட் விட்டும், தன்னுடைய நிலைமையை உயர்த்திக்கொண்டு இருக்கிறது. இந்த நிலைமையைப் பார்க்கிற நேரத்தில் இந்திரா காந்தி அவர்களே நாம் பாராட்டுவதைப் பொறுத்துக்கொள்ள மனம் இல்லாதவர்கள் எல்லாம் ஒன்று கூடி, ஒரு பேரியக்கமாக சேர்ந்து, சீனுவின் ஆதரவாளர்கள், அமெரிக்காவின் ஆதரவாளர்கள், ஜாதிய ஆதரவாளர்கள், மத ஆதரவாளர்கள், மொழி ஆதரவாளர்கள், மற்ற பல்வேறு ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து அந்தப் பெருமையை ஜீரணித்துக் கொள்ளமுடியாததால் அவர்கள் மீது ஆத்திரப்பட்டு சிலவற்றைப் பேசிக் கொண்டும், காரியங்களைச் செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

நாம் கொண்டு வந்து இருக்கிற இந்தத் தீர்மானம் அங்கேயுள்ள மக்களின் உணர்வுகளே மதித்து கொண்டு வந்து இருக்கிறோம் ஆகவே, இந்தத் தீர்மானமானது இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு மிகப்பெரிய பிரதானமான தீர்மானமாகும். அந்த வகையில் அரசியலில் நல்ல கருத்து உடையவர்கள், சிந்தித்துப் பார்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒரு தேசத்தின் பாதுகாப்பு சீராக இருந்தால்தான், அந்த தேசத்தில் முன்னேற்றம் உண்டாக்க முடியும். இது அவ்வளவு பேருக்கும் தெரிந்த உண்மையாகும். தேசம் பயந்து கொண்டு இருந்தால், தேசத்தின் பலம் கெட்டுவிடும். முன்னேற்றம் தடைப்பட்டு விடும். இருப்பினும், இந்தியா நாட்டிற்கு விஸ்வாசம் இல்லாத நிலையில் சில அரசியல் கட்சிகள் இருந்தாலும் சரி, அவர்கள் மீது எல்லாம் கூட நடவடிக்கை எடுக்காமல் இருக்கிற ஒரு ஜனநாயகப் பண்பாட்டை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படி எல்லா வகையிலும் சரி—இந்த மாநிலமும் சரி—மற்ற மாநிலங்களும் சரி—

1975 மே 2] [திரு. எம். சுரேந்திரன்]

தேசத்தில் இருக்கிற அத்தனை பெருமக்களும் பெருமைப் படக்கூடிய அளவில் நடந்திருக்கிற காரணத்தினுல் இந்தத் தீர்மானத்தை முழு மனதாக ஆதரித்து அமர்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். இதற்கு முன்பு 36-வது திருத்தம்—இந்தச் சபையில் சர்க்கார் தரப்பில் மூவ் செய்து விவாதிக்காமல் விட்டிருந்தார்கள். அதற்காக நான் அதை விவாதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்களே அது அவசியம் இல்லையென்று சொன்னீர்கள். இது ஏற்கெனவே பார்லி மெண்டில் நிறைவேறிவிட்டது. இந்திய பாராளுமன்ற இரண்டு பேரவைகளிலும் நிறைவேறிய ஒன்றை—இந்த அவையை அவசரம் அவசரமாகக் கூட்டி ஒரு நாளைக்காக—நாம் கூட இதை ராடிபை பண்ண வேண்டுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதற்கு சர்க்கார் தரப்பில் இருந்து விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது ஏதோ தற்செயலாக ஏற்பட்டது அல்ல. தொடர்ந்து அங்கு இருக்கக்கூடிய மக்கள் நிலப் பிரபுத்துவத்தை எதிர்த்து—ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராட்டம் வெற்றிபெற் றிருப்பதன் விளைவுதான் இந்திய யூனியனோடு இணையவேண்டும் என்ற இந்த நிலை வந்திருப்பதாகும். சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக சேருவதன் காரணமாக இனி 21 மாநிலங்களுக்குப் பதிலாக 22 மாநிலங்கள் கொண்டதாக இந்திய யூனியன் ஆகிறது.

(திரு. கு. காமாட்சி தலைமை)

அவர்களது வெகுநாளைய கோரிக்கை—அவர்களது சட்டசபை யிலேயே இப்படிச் சேர்வது என்று அவர்களே தீர்மானத்தை நிறை வேற்றியிருக்கிறார்கள். அதனை வரவேற்கிறோம்.

இன்றையதினம் சிக்கிம் இந்திய எல்லை—நிபெத்து போய் விட்டது. இது ஒரு முக்கியமான அம்சம்—முன்பு Buffer ஸ்டேட்டாக இருந்தது. இப்போது நாம் நேரிடையாக பார்டரில் போய்ச் சேருகிறோம். இது ஒரு முக்கியமான பங்காகிவிடுகிறது என்பதை மறுக்க முடியாது.

[திரு. என். கே. பழனிசாமி] [1975 மே 2

அந்நாட்டு மக்கள் சபைக்கும்—மன்னருக்கும் ஏற்கெனவே ஒரு உடன்பாடு இருந்தது. அந்த உடன்பாட்டுக்குக்கூட அந்நாட்டு மன்னர் மதிப்பளிக்கவில்லே. தன் தம்பிகளே—மற்றவர்களே வெளி நாடுகளுக்கு அனுப்பி இந்தியா ஆக்கிரமிப்பு செய்வதுபோல பொய்ப்பிரசாரத்தைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்ததை நாம் அறிவோம். நேபாளம் சம்பந்தமாகவும் என்ன நடந்துகொண்டிருக் கிறது என்பதை நாம் அறிவோம். அமெரிக்கா, சீனு போன்ற ஏகாதி பத்தியங்கள் இந்தியாவின் வளர்ச்சி குறித்து எரிச்சல் அடைவதோடு, இந்தியாவைப் பலவீனப்படுத்த பல காரியங்களேச் செய்து வருகிறார்கள்.

சிக்கிம் நாட்டிலேயே மன்னர் தன்னுடைய பாதுகாப்பாளர் களுக்கு நவீன ஆயுதங்களேக் கொடுத்து சிக்கிம் நாட்டு முக்கியமான தலேவர்களேக் கொல்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்நாட்டு முதல் மந்திரி உட்காரக்கூடிய சீட்டில் குண்டு வைத்து அவரைக் கொலே செய்யவே ஏற்பாடு செய்தார்கள். சிக்கிமை சி.ஐ.ஏ. பேஸாக ஆக்க ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது என்பது எல்லாம் நமக்குத் தெரியும். பாலன்ஸ் ஆப் பவரை கீப்பப் பண்ணி— இந்தியாவை பலவீனப்படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்த முயற்சிகள் பல. இதை எல்லாம் எதிர்த்துத்தான் இப்போது அந் நாட்டு மக்கள் இந்தியாவோடு இணேவதற்கு முன்வந்திருக்கிறார்கள்.

சிக்கிம் இந்தியாவோடு இணேவதைக் கண்டு நேபாளம் அஞ்சு கிறது. காரணம் நேபாளத்திலும் பூமி பூராவும் ராஜாவுக்குச் சொந்தம்—அவரது சொந்தக்காரர்களுக்குச் சொந்தம். மற்றவர் கள் எல்லாம் கூலியாட்களாகத்தான் வேலே செய்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு சிக்கிம் இந்தியாவோடு இணேவது பற்றி அவர்களுக்கும் கவலேயிருக்கிறது. எங்கே தங்களுடைய நாட்டிலும் ஜனங்கள் இப்போதுள்ள அரசாங்கத்திற்கு எதிராகக் கிளம்பிவிடுவார்களோ என்கிற பயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா ஆக்கிரமிக்கவில்லே. 1925-இல் இருந்து 1945-ஆம் வருஷம் வரை பிரிட்டிஷ் காலத்தில் அதுபற்றி—காரோவே சொல்லியிருக்கிறார். சிக்கிம் இந்தியாவின் பகுதிதான். சிக்கிம் இந்தியாவின் எக்ஸ்டர்னல் எல்லே. அங்கே இருந்தவர் ரெசிடென்ட் பொலிடிகல் ஆபீசர்தான். அவர் அம்பாசிடர் இல்லே. சிக்கிம் ஒரு கேந்திரமான இடம்—அங்கு இருக்கக்கூடிய

1975 மே 2] [திரு. என். கே. பழனிசாமி]

ரெசிடென்ட் இந்தியாவின் மற்ற பாகங்களில் இருந்த கவர்னர்களைப் போலத்தான் நடந்துகொண்டிருந்தார் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1960-ஆம் வருஷம் சிஞவின் பிரதமர் இந்தியா வந்தபோதுகூட அது இந்தியாவின் பகுதி என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

1963-ம் வருஷத்தில் சம்புவாலி அவர்களைச் சார்ந்தது என்கிற நிலையை ஏற்படுத்திக்கொள்ள முயன்றபோதுதான் போராட்டம் வந்தது. அவர்களது முயற்சி முறியடிக்கப்பட்டதும் தெரியும். சீனக்காரர்கள் திபெத்தை கைப்பற்றினார்கள். திபெத்தை தங்களுடைய கை என்றும் நேபாளம், பூட்டான், சிக்கிம், அஸ்ஸாம் நார்த் ஈஸ்ட் ப்ராண்டியர் எல்லாம் கையில் ஐந்து விரல்கள் என்றும் Five fingers should come over that side.
என்ற முறையில் அவர்கள் பிராபகாண்டாவைக் கிளப்பினார்கள்.

இந்தியா தொழில் வளர்ச்சியில் முன்னேறிக்கொண்டிருப்பது கண்டு சீனுவுக்கு பொறுமை. இன்றைக்கு அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி அளிக்க முன்வந்திருப் பது இந்தியாவைப் பலவீனப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தில்தான். சீனுவும் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போர் கப்பலைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு நம்மை மிரட்டியதை நாம் அறிவோம். நம்மைப் பொருளாதார நெருக்கடியில் நிறுத்த அவர் கள் முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு சிக்கிம்மில் சி.ஐ.ஏ. ஸ்தாபனத்தை நிறுவ வேண்டும் என்பது எண்ணம். அந்த ஒரே எண்ணத்தில் அவர்கள் செய்கிற காரியங்களை நாம் இந்தப் பிரச்சினை யில் பார்க்கிறோம். அதற்கு இடம் கொடுக்காமல், அங்கிருக்கக் கூடிய மக்கள் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து இந்தியாவுடன் சேர்ந்தாகிவிட்டாயிற்று. இந்தியாவுடன் சேர்ந்தால் மட்டும் போதாது. இந்த அரசியல் சட்ட திருத்த மசோதா இங்கே வரக் கூடிய காலத்திலே, அந்த கவர்னருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சட்டசபைப் ஒரு தீர்மானம் நிறைவேற்றினாலும் கூட

[திரு. என். கே. பழனிசாமி] [1975 மே 2

மந்திரிகளுடைய சம்மத்தின் பேரிலேதான் காரியங்கள் செய்ய வேண்டும். ஆனல், அங்கே இருக்கக்கூடிய கவர்னர் மந்திரிகள் சம்மதம் இல்லாமலே செய்யலாம். அப்படிப்பட்ட நிலைமை காஷ்மீரிலே உண்டு, அஸ்ஸாம் கவர்னருக்கு அந்த அதிகாரம் உண்டு. ஜனநாயகத் திட்டங்களென்றுல் அமைச்சர்களுடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பதுதான் நல்லது. ஏனென்றுல், டிஃபென்ஸ் இந்திய சர்க்கார் கையிலிருக்கிறது. அப்படி இருக்கும்போது, கவர்னருக்கு விசேஷ அதிகாரம் வேண்டுமா என்பது முக்கியம்.

அதோடு 7-வது ஷெட்யூல்—தமிழ்நாட்டுக்குக்கூட அப்ளை ஆக வில்லை. அங்கே இருக்கிற நிலப்பிரபுத்துவ முறை ஒழியவேண்டும். ஆகவேதான் ஜனங்கள் போராடினுர்கள். தமிழ்நாட்டுக்கும் அப்ளை ஆகவேண்டும். சிக்கிமுக்கும் அப்ளை ஆகவேண்டும். அதற் கேற்ப கான்ஸ்டிட்யூஷனைத் திருத்தினுல்தான் பிரயோஜனம். அப்படி இல்லாவிட்டால், எதற்காகத் திருத்தம் கொண்டு வந்தார் களோ, அது பிரயோஜனம் இல்லாமல் போய்விடும் என்று கூறி, அமர்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் சபையின் முன்னவர் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்துத் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தில் 38-வது தடவையாக இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. ஒரு காலத்திலே, இந்தியா விடுதலை பெற்ற பிறகு மன்னர்கள், இராஜாக்கள், சமஸ்தானுதிபதிகள் போன்றவர்கள் சிறுசிறு தேசங்களை ஆண்டு கொண்டிருந்தார்கள். பிறகு, அந்தத் தேசங்கள் எல்லாம் இந்தியாவோடு இணைய வேண்டு மென்பதற்கு அன்றையதினம் மன்னர்கள், இராஜாக்கள், சமஸ் தானுதிபதிகள் ஆகியோரையெல்லாம் ஒழித்து, இந்தியாவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டன. அப்பொழுதே சிக்கிம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். மிகக் காலதாமதமாக, 1950-ம் வருஷத்திற்குப் பிறகு, 25 ஆண்டுகளுக்குப் பிறகு, அங்கே இருக்கக் கூடிய மக்களெல்லாம் விரும்பி, இந்தியாவோடு இணைய வேண்டு மென்று ஏகோபித்துச் சொன்னபிறகு, அந்த மன்னரால் ஒன்றும்

1975 மே 2] [திரு. ஆ. கு. சுப்பையா]

மறுக்க முடியாத நிலைமை ஏற்பட்டபிறகு, இன்றையதினம் இந்தியாவோடு இணைக்கப்படுகிறது. 210,000 மக்கள் இன்றையதினம் இந்தியாவோடு இணையவேண்டுமென்ற ஒரு விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். 1950-ம் ஆண்டிலிருந்து, அந்தத் தேசத்தினுடைய பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு விவகாரம் போன்றவைகளை இந்திய அரசு பாதுகாத்து வந்திருக்கிறது. இன்றையதினம் மிகக் காலதாமதமானலும்கூட, அம்மாதிரியாக இணைந்துக்கொள்ளக்கூடிய நிலையில் அரசு முன் வந்திருப்பதற்கு நாம் வரவேற்கக் கூடியவர்களாக இருக்கிறோம், பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். இம் மாதிரி, இந்தத் தேசங்கள், சிறுசிறு தேசங்களாக இருப்பதன் காரணமாக, அயல்நாட்டவர்கள், இந்தியாமீது விரோதம் கொண்டவர்கள், தங்களுடைய படைகளை வைத்துக்கொண்டு, அந்த நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்த நாட்டில் தங்களுடைய படைகளை இறக்கி, இந்தியாவை அச்சுறுத்துவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய நிலையில் பல தேசங்களை இம்மாதிரியாக வைத்திருந்தார்கள். ஆகவே, இன்றையதினம் அந்தத் தேசங்களெல்லாம் ஒழிக்கப்பட்ட பிறகும் கூட, சிக்கிம் தேசம் ரொம்ப காலமாக, 25 ஆண்டு காலமாக தனித்து இயங்கிக்கொண்டு வந்தது. அது இந்தியாவுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது என்பதை நாம் இன்றையதினம் பார்க்கிறோம். அந்த முறையிலே, இந்தியாவோடு, இந்திய மக்களோடு சேர்ந்திருக்க வேண்டுமென்ற விருப்பம் கொண்டிருக்கக்கூடிய சிக்கிம் மக்களுக்கு என்னுடைய, நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில், பாராட்டு தெரிவித்து, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திருமதி சத்தியவாணிமுத்து: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சிக்கிம் நாட்டு இணைப்பினையொட்டி, அரசாங்க அரசியல் சட்டத் திருத்தத்தைத் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் வரவேற்கின்றேன்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 மே 2

அது வெட்டி, ஒட்டி பேசிய பிறகு எடுக்கவேண்டிய முடிவல்ல. அனைவரும் ஏகோபித்த, ஒரு ஒப்புதலைத் தரவேண்டிய ஒரு நிர்மான மாகும். ஆனல், மன்னர்கள் ஆட்சியில் மக்கள் தவித்ததையும், அதற்குப் பல நூற்ருண்டுகளாகப் பெரும் புரட்சிகள் ஏற்பட்டு, அந்தக் கொடுமைகள் எல்லாம் நீக்கப்பட்டதென்பதையும் நாம் வரலாற்றிலே படித்திருக்கிறோம். இந்திய நாட்டோடு பல மன்னர் கள்—அரசுகள் சேர்க்கப்பட்ட பிறகும் இப்படிப்பட்ட வாக்கெடுப் பின் மூலமாகச் சேர்க்கப்படவில்லை. ஆனல், மக்களை வாழ வைக்க வேண்டியவர்கள், அவர்களது உழைப்பில் உல்லாசமாக மகோன்னத வாழ்க்கையை வாழும்போது ஆண்டாண்டுகாலமாக, முடியாட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிற மக்களாக இருந்தாலும், அவர்கள் ஒரு நாளைக்கு எதிர்த்தே திருவார்கள் என்பதற்கும், அவர்கள் ஜனநாயக முறைப்படி எடுக்கின்ற முடிவை உலக அரங்கில் தட்டுப்பாடு இல்லா மல் ஏற்றுக்கொள்ளமுடியும் என்பதற்கும் சிக்கிம் நாட்டு மக்கள் எடுத்திருக்கிற முடிவு ஒரு பெரிய எடுத்துக் காட்டான முடிவாகும். ஆட்சியிலே மன்னராக இருக்கின்றோம் என்ற எண்ணத்திலேதான் சோக்கியால் அவர்கள் நினைத்ததைப்போல் ஆட்டம் போட்டிருக் கிறார்கள். எனவே, மக்கள் யாரோடு சேரலாம் என்கின்ற முடிவிற்கு அவர்களாகவே வந்து ஒரு வலுவான அரசு நாம் ஜனநாயகத்திலே பெறுவதுதான் என்று, சட்டசபையை உருவாக்கினர்கள். இன்றைக்கு இந்திய நாட்டோடு சேர்ந்துகொள்வோம் என்கின்ற முடிவினைப் பெருவாரியாக எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

சிக்கிம் இந்திய நாட்டின் ஒரு மாநிலமாக இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, என்றைக்குமே அக்கிரமங்களை மக்கள் ஓரளவுக்குத்தான் தாங்கிக் கொள்வார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அதை, ஆளுகிறவர்கள் யாராக இருந்தாலும் உணர்ந்தாகவேண்டும். இந்திய அரசாங்கம், இந்தியப் பிரதமர் அவர்கள் இதில் எடுத்திருக்கின்ற முயற்சியும், அடைந்திருக்கிற வெற்றி யும் மிகப் பெரிய வெற்றியாகும். இங்கே குறிப்பிட்டதைப் போல் சிக்கிம் நாடு நம்மோடு இணைந்ததால், அதில் நமக்கு அதிக லாபமா அல்லது அவர்களுக்கு அதிக லாபமா என்று நினைக்கும் போது நமக் குத்தான் அதிக லாபம். அது ஒரு சிறிய நாடாக இருக்கலாம். மக்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். வளத்திலே குறைவாக இருந் தாலும், அது இருந்த இடமும், அதைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள அரசியல் ஹேஷ்யங்களும், அதை மையமாக வைத்துக்கொண்டு

1975 மே 2] [திருமதி சத்தியவாணிமுத்து]

நமது எதிரிகள் நினைத்தவாறு காரியங்களைச் சாதிக்கத் தொடுத்த கூனைகளும் நமக்கு என்றைக்குமே அடையாளக் குறிகளாக இருந்தன. மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது என்பதைப் போல் சிக்கிம் நாடு சிறிய நாடாக இருக்கலாம். ஆனால், அது எதிரிகளுக்கு ஒரு தளவாடமாக அமையக் கூடாத நிலையில் நம்மோடு சேர்ந்திருப் பது இன்றைக்கு உலக நாட்டிலே பெரிய முக்கியத்துவத்தைப் பெற் றிருக்கிறது. அதனாலே இந்திய நாட்டிற்கு அதிக லாபம் என்றுதான் கூற முடியும்.

21 என்று இருந்த மாநிலங்கள் 22 ஆக ஆவது, மாநிலத்திற்கு அதிக சுயாட்சி தேவை என்பதற்கு நமக்கு ஒரு ஆதரவு அங்கே கிடைத்தது என்று இன்றைக்கே எடுத்துக் கூறி, வருகிற விருந்தாளி என் பக்கத்திலேதான் உட்காருவான் என்று நினைத்துக்கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதுதான். வலுவான அரசும் நல்ல ஆட்சியும் மக்களுக்குக் கிடைக்கவில்லையே என்று மன்னரது ஆட்சி யில் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் இந்தியப் பேரரசின் வலுவான பாதுகாப்புத் தேவை என்பதை உள்ளடக்கித்தான் இன்றைக்கு இந்த நாட்டோடு இணைந்து கொண்டார்கள். அந்த எண்ணத்தைக் கொண்ட மக்கள் மறுபடியும் எங்களுக்கு சுயாட்சி

(முற்பகல் 11-30)

தேவை என்று கேட்கக்கூடிய அளவிற்கு வருவார்களா என்பது சந்தேகத்திற்குரியதாகும். எனவே, இப்போதே அவர்களையும் ஒரு கூட்சியிலே சேர்த்துக்கொண்டு பேசுவது சரியல்ல, முறையல்ல.

இந்திய அரசு எடுத்து இருக்கிற இந்த முடிவு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவு, பாராட்டக்கூடிய முடிவு. இந்திய அரசு பாது காப்பிற்காக எத்தனையோ கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறது, அந்த வகையில் நமக்கு பாதுகாப்பு அரணாக அமைகின்ற அந்த சிக்கிமிற்கு எத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும், எவ்வளவு நிதி ஒதுக்கீடு அந்த மாநிலத்திற்குச் செய்தாலும் அதிலே தவறு இருக்க முடியாது. அதை மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 மே 2

எல்லையோரங்களிலே இருக்கிற நாடுகள் சிறுசிறு நாடுகளாக இருந்தாலும்கூட இந்திய அரசு அவைகளுக்கு எல்லாம் அரவணைப்பு தந்துகொண்டு இருப்பது நமக்கு லாபம்தான். அந்த எல்லையோரப் பகுதி நாடுகளில் கவர்னராக வருகிறவர்களுக்கு மற்ற மாநிலங்களிலே உள்ள கவர்னர்களைவிட அதிகமான அதிகாரங்கள் தேவைப்படலாம். சில நேரங்களிலே அவர்களே முடிவு எடுக்கக்கூடிய நிலைமை வந்து விடும். மத்திய அரசாங்கத்தின் முடிவை அவர்கள் அங்கே அமல் படுத்தவேண்டிய நிலைமை வந்துவிடும். எனவே, அப்படிப்பட்ட காலங் களிலே எல்லாம் அங்கே கவர்னர்களாக வரக்கூடியவர்கள் இந்திய அரசாங்கத்தின் தூதுவர்களாக இருந்து இந்திய நாட்டையே பாது காக்கின்ற அளவிலே இந்திய நாட்டோடு இணையக்கூடிய அளவிற்கு முடிவு எடுப்பதற்கு அந்த கவர்னர்களுக்கு எல்லாம் தனி அதிகாரங் கள் கொடுப்பது பொதுவாக இந்திய நாட்டின் பாதுகாப்பிற்குச் சாலச் சிறந்தது ஆகும். எனவே, சிக்கிம் கவர்னருக்கு அதிக அதிகாரம் கொடுத்திருப்பது பாராட்டுதற்குரியது.

இந்தத் தீர்மானத்தை தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத் தின் சார்பில் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறி, இந்தத் தீர்மானத்திலே எந்த மாறுதலும் செய்யாமல் ஏகோபித்து ஏற்றுக் கொள்வது சாலச் சிறந்தது என்பதையும் கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு. ஆலடி அருணா: துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களை இம்மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லைப் பகுதியில் இருக்கிற சிக்கிமை புதிதாக இணைப்பதைப்பற்றி நாம் எல்லாம் பெருமைப்படுகிறோம், மகிழ்ச்சியடைகிறோம். இந்தியத் துணைக் கண்டத்தோடு சிக்கிம் மாநிலத்திற்கு எந்த அளவிற்கு பிணைப்பு இருந்தது, நட்பு இருந்தது, உறவு இருந்தது என்பதைப்பற்றியெல்லாம் விளக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். சிக்கிம் மாநிலத்தை இந்தியத் துணைக் கண்டத்தோடு இணைப்பதன் மூலம் இந்தியத் துணைக் கண்டத் தின் பாதுகாப்புக்கு நல்ல வாய்ப்பு வசதி உருவாகியிருக்கிறது என் பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

1975 மே 2] [திரு. ஆலடி அருணா]

இந்த மன்றத்திலே அதைப்பற்றியெல்லாம் தெளிவாகச் சொன்னார்கள். எனவே, இந்தியத் துணைக் கண்டத்திற்கு நல்ல பாதுகாப்பு அரணாக எல்லைப் பகுதியில் அமையக்கூடிய வகையில் அது இணைந்திருப்பது பெருமையளிக்கக்கூடியதாகும். அந்த மாநிலத்தை இணைத்தது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிப்பதாக இருந்ததோ அதைப்போன்று சில சந்தேகங்களும் கசப்புணர்வுகளும் இருக்கத்தான் செய்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய முறையில் 38-வது திருத்தம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிக்கிமை இணைத்தாக வேண்டும், இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கவேண்டும் என்று 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் நாளன்று சிக்கிம் சட்ட மன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

"This Assembly resolves and hereby requests the Government of India to examine the modalities of further strengthening Indo-Sikkim relationship as already agreed to in the Agreement of May 8, 1973 signed between the three parties and to take immediate steps for Sikkim's participations in the political and economic institutions of India."

என்று அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இந்தியத் துணைக் கண்டத்தின் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அதை இந்திய அரசாங்கம் பரிசீலித்து சிக்கிமிற்கு "அஸோஷியேட்டட் ஸ்டேட்டஸ்" கொடுப்பதற்கு முடிவுக்கு வந்து 36-வது அரசியல் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்திலே முன்மொழிந்தார்கள். அந்த அடிப்படையிலே சிக்கிம் நல்ல அந்தஸ்தையும் உயர்ந்த தன்மையையும் பெற்றது. அதைப்பற்றி நாடாளுமன்றத்திலே பேசிய அமைச்சர் சுவரன்சிங் அவர்கள் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு இங்கே அதை நினைவுபடுத்திக்கொண்டால் ஆச்சரியமாக இருக்கும்.

"We are not writing Constitution for Sikkim. It is the Sikkim Assembly which has to write their own Constitution. If they adopt another Constitution we cannot alter their Constitution. It is for them to decide whether they want to have Chogyal or not."

[திரு. ஆலடி அருணு] [1975 மே 2

என்று அப்போதே நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார்கள். இதை இந்த நேரத்திலே நினைவுபடுத்துவதற்குக் காரணம் அங்கே 36-வது திருத்தத்தை முன்மொழிந்த நேரத்தில் மத்திய அரசாங்கத்தின் கொள்கை சிக்கிம் மாநிலம் ஒரு இணைப்பு மாநிலமாக இருக்கவேண்டு மென்று சொன்னர்கள். அந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்திலே முன்மொழியப்பட்ட நேரத்திலே இந்த மாநிலத்திலே மாநில சுயாட்சி வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றும் மணிக்கணக்கில் ஒவ்வொரு கூட்டத்திலேயும் வலி யுறுத்திக் கொண்டுவருகின்ற தி.மு.க. அருமை நண்பர்கள் 36-வது திருத்தம் நாடாளுமன்றத்திலே வந்த நேரத்திலே அன்றைக்கு அதை ஆதரிக்காதது மட்டுமல்ல, எதிர்த்தார்கள் என்பதை இந்த நேரத் திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கட்சியின் தலைவராக அங்கே இருக்கின்ற இரா. செழியன் அவர்கள் அந்த 36-வது திருத்தம் நாடாளுமன்றத்திலே முன்மொழியப்பட்ட நேரத்திலே ஏன் அவசரப்படுகிறீர்கள், எதற்காக ஆத்திரப்படுகிறீர் கள், எதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துகிறீர்கள், எதற்காகக் குடியாட்சித் தத்துவத்தைக் குலைக்கிறீர்கள் என்று நாடாளுமன்றத் திலே பேசினர்கள். இப்போது அதை இங்கே நான் நினைவுபடுத்து வதற்குக் காரணம் அந்தத் தவறை திருத்திக்கொள்வதற்குப் பயன் படும் என்ற காரணத்தினுலேதான் நினைவூட்டுகிறேன். அன்றைக்கு அங்கே இரா. செழியன் அவர்கள்

"We cannot rush where India's constitutional character is concerned, I do not know whether it is for the better or for worse. But the federal character is being changed. I do not know why they should rush through this Bill, introducing it on Monday and getting it passed on Wednesday."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் மாநில சுயாட்சி வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறவர்கள் சிக்கிமிற்கு "அஸோஷியேட்டட் ஸ்டேட்டஸ்" கொடுத்த நேரத்திலே ஆதரிக்காதவர்கள், அதை வரவேற்காதவர்கள், அதற்கு உறுதுணை புரியாதவர்கள் இன்றைக்கு நம்மைப்போன்று அந்த மாநிலம் குறைந்த அதிகாரங்களோடு வருகிறபோது ஏன் ஆதரிக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. 36-வது திருத்தம்

1975 மே 2] [திரு. ஆலடி அருணு]

கொண்டுவந்த நேரத்தில் அங்கே இரா. செழியன் மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலே அங்கம் வகிக்கிற தண்டபாணி அவர்களும் அந்த மசோதாவை ஆதரிக்காமல் மத்திய அரசாங்கத்திற்கு எதிராக எப்படிப்பட்ட புகார்களை எழுப்புவதன்மூலம் என்ன என்ன கருத்துக்கள் பிற இடங்களில் பரவுகின்றன என்பதை நாடாளு மன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்; அதைப்பற்றி நான் தெளி வாகச் சொல்லவில்லை. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் 36-வது திருத்தத்தை வரவேற்காதவர்கள் ஆதரிக்காதவர்கள் இன்றைக்கு 38-வது திருத்தத்தை ஆதரிக்கிறார்கள், வரவேற்கிறார்கள்.

38-வது திருத்தத்தில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில கருத்துக்களைக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே சில கசப்புணர்வுகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சிக்கிம் மாநில கவர்னருக்கு அபரிமிதமான அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த அதிகாரங்கள் மாநிலத் தின் உரிமைகளை, நியாயங்களைப் புறக்கணிப்பதாக அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"(g) the Governor of Sikkim shall have special responsibility for peace and for an equitable arrangement for ensuring the social and economic advancement of different sections of the population of Sikkim and in the discharge of his special responsibility under this clause, the Governor of Sikkim shall, subject to such directions as the President may, from time to time, deem fit to issue, act in his discretion;"

என்று திருத்தத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தின் மூலம் இன்றையதினம் புதிதாக இணைக்கப்படுகிற சிக்கிம் மாநிலம் தன்னுடைய அதிகாரத்தில் பெரும்பான்மை அதிகாரங்களை இழந் திருக்கிறது. மாநில சுயாட்சி என்று சொல்லி பெருமையாகப் பேசு கிறோம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்கிறோம் . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நண்பர் அருணு அவர்கள் 36-வது திருத்தத்தில் முன்னேற்றக் கழக நண்பர்கள் அங்கே பேசியதைச் சொன்னார்கள். 38-வது திருத்தத்திலே அருணு அவர் களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது பாராளுமன்றத் திலே அதைப்பற்றிப் பேசினார்களா?

[1975 மே 2

திரு. ஆலடி அருணா: எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கவர்னருக்கு அதிக அதிகாரம் கொடுப்பதை விரும்பவில்லை, அதைத் தான் நாங்கள் சொல்கிறோம். உங்களுக்கு தைரியம் இல்லை. எங்கே எதிர்க்கவேண்டுமோ அங்கே நீங்கள் எதிர்ப்பதில்லை. எங்கே முத்திரையிடவேண்டுமோ அங்கே நீங்கள் முத்திரையிடுவதில்லை.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சொல்கிறார்கள், சுயாட்சியைத் தமிழ் நாட்டிற்கு மட்டும் கேட்கவில்லை, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறேன், வறட்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்வதில் நாம் கையாளும் கொள்கை இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் வேண்டுமென்றுதான் கேட்கிறேன் என்று சொல்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன், இந்தியாவுடன் புதிதாக ஒரு மாநிலத்தை இணைக்கும்பொழுது ஏற்கெனவே இருக்கும் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைவிடக் குறைந்த அதிகாரங்களோடு இணைக்கப்படுவது கண்டிக்கத் தக்கது என்ற அடிப்படையில் ஏன் குரல் எழுப்பவில்லை?

36-வது திருத்தத்தையே இந்த மன்றத்தில் வைக்கவில்லை. உண்மையாகவே சொல்கிறேன், அதை இந்த மன்றத்தில் ஒப்புதலுக்கு வைத்து பெருமைப்பட்டிருக்க வேண்டும். அதன் மூலம் ஊட்டம் தேடியிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இப்பொழுது உரிமையைப் பறிக்கிற திருத்தத்தை ஒப்புதலுக்கு வைத்து இருப்பதிலேயிருந்து சுயாட்சியில் உங்களுக்கு எவ்வளவு நம்பிக்கையிருக்கிறது என்பதை நாடு தெரிய இதுவொரு சந்தர்ப்பமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, புதிதாக ஒரு நாட்டை இணைப்பதன் மூலம் நாடு புகழுறவும், பெருமையுறவும், இந்தியத் துணைக் கண்டத்தின் பாதுகாப்பிற்குப் பலம் தேடவும் இது அமைந்திருக்கிறது என்பதால் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

1975 மே 2]

திரு. செ. சுந்தப்பன் : துணைத் தலைவரவர்களே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்று ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பிறகு முதன் முறையாக இந்த மண்ணோடு நாம் வேறு சில பகுதிகளையும் கூடுதலாக இணைக்கிறோம். 1947-இலிருந்து 1975-வரையில் இந்த நாட்டினுடைய தேசப் பாதுகாப்பு குறித்து நாம் சில காரியங்களை நினைக்கும்பொழுது, நாம் பெருமைப்படத்தக்க அளவிற்கு வேறு பகுதி மண்ணை இணைக்கிற முதல் காரியம் இது. இந்தியக் குடிமகன் என்று கூறிக்கொள்கின்ற ஒவ்வொரு மனிதனும் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சியாகும் இது. இந்தச் சாதனையைச் சாதித்த இந்திய அரசு நிச்சயமாகப் பாராட்டப் பட வேண்டிய ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடைய நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்பொழுது ஏதோ யாரும் பாராட்டுத் தர மாட்டேன் என்கிறார்கள் என்பது போன்ற அங்கலாய்ப்போடு கேட்கிறார்கள். நான் அறிந்த வரையில் இன்றைக்கு காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள இந்தியத் திருநாட்டின் மக்கள் இந்த இணைப்பை வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள்.

1947-க்குப் பிறகு குறிப்பாக நம்முடைய வட பகுதியில் இமாலயச் சாரலில் இந்திய நாட்டுப் பாதுகாப்பு அடிப்படையில் நம்முடைய இந்திய நாடு வெளிநாட்டோடு நடந்து வந்திருக்கிற அல்லது தொடர்ந்து காப்பாற்றி வந்திருக்கிற உறவு முறைகள் நம் நாட்டிற்கு அவ்வளவு பாதுகாப்பு தருவனவாக துவக்க காலத்தில் அமையவில்லை. குறிப்பாக, இன்றைக்கும் அரசியல் நோக்கர்கள், உலகத்தின் கூறை என்று சொல்லப்படுகின்ற திபெத்தை நாம் இழந்தது இந்த நாட்டின் பாதுகாப்பிற்கு எவ்வளவு பெரிய பலகீனத்தை உண்டாக்கியிருக்கிறது என்று கூறுவதை இன்றைக்கும் நாம் மறுக்க முடியாது. அன்றைய தினம் திபெத்தை நாம் இழந்தோம். அந்த திபெத்தை இழந்ததற்கு காங்கிரஸ்காரர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாதத்தைப் புரிய இங்கே வரவில்லை. ஆனால் அந்தத் தவறுகளெல் லாம் இப்பொழுது செப்பனிடப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக சில நடைமுறைகள், இந்தியப் பாதுகாப்பிற்கு வலுவூட்டுவனவாக

[திரு. செ. கந்தப்பன்] [1975 மே 2

அமைந்து வருகின்றன என்பது பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க கூறுபாடு என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்பு கிறேன்.

சிக்கிம், பூடான் ஆகிய இரண்டு பகுதிகளும் நீண்ட நெடுங்கால மாக உலக அரங்கில் இந்திய நாட்டையொட்டி, இந்திய நாட்டி னுடைய ஒரு நிழலின் கீழ் இயங்கும் நாடுகளாக இருந்தன. இன்றைக்கு சிக்கிம் நம்முடன் முழு நிலையில் இணைந்திருக்கிறது. நேபாளம், குறிப்பாக இங்கேகூட கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்பொழுது, சீனாவைச் சேர்த்துச் சொல்லும்பொழுது நேபாளத்தையும் சேர்த்துச் சொன்னார்கள். நமது ரிகார்டைச் சரி செய்வதற்காக இந்த வார்த்தையைச் சொல் வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சீனாவை நேபாளத் தோடு நாம் இணைத்துப் பேச முடியாது. நேபாளம் நம்முடைய நட்பு நாடாக இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. சிக்கிம், பூடான், நேபாளம் போன்ற பகுதிகளெல்லாம் பஃபர் என்ற நிலை யிலிருந்து சிக்கிம் முழுப் பகுதியாக இணைந்திருக்கிறது.

திரு. ஆலடி அருணா அவர்கள் ஒரு விசித்திரமான வாதத்தைச் சொன்னார்கள். 38-வது அரசியல் திருத்தத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் 36-வது திருத்தத்தைப்பற்றிக் கடுமை யாக வாதம் எழுப்பினார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 36-வது அரசியல் திருத்தம் ஒரு அரை வேக்காட்டுத் திருத்தம். எனவே எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை மறுத்தார்கள். நான் இன்னும்கூடத் துணிந்து சொல்வேன், அன்றைக்கு அவர்கள் சொன்ன யோசனைகளின் அடிப்படையில்தான் இன்றைக்கு முழு நிறைவு பெற்றதாக 38-வது திருத்தம் அமைந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, 36-வது திருத்தத்திலே திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ஸ்டான்ட் எடுத்தார்களே தவிர, அதை எதிர்த்துவிட்டு 38-வது திருத்தத்தை வரவேற்றுக்கொண்டிருக்கிறோம் என்ற வாதம் சரியல்ல.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 36-வது அரசியல் சட்ட திருத்தம் வந்த நேரத்தில் அது ஒரு அரைவேக்காட்டுத் திருத்தம் என்று கருதிப் பேசியதாகவும், ஆகவே, அந்த அடிப்படை யில்தான் 38-வது திருத்தம் வந்திருப்பதாகவும் உறுப்பினர்

1975 மே 2] [திரு. செ. அரங்கநாயகம்]

திரு. கந்தப்பன் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் 36-வது சட்டத் திருத்தம் வந்த நேரத்தில் அதிலே சிக்கிமுக்குத் தரப்பட்டிருக்கிற உரிமைகள் தமிழ்நாட்டிற்குத் தரப்பட வேண்டுமென்று பேசிய பேச்சைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

திரு. செ. கந்தப்பன் : நம்முடைய அரங்கநாயகம் அவர்கள் என்னுடைய வாதத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ள சற்று அமைதியாக இருக்க வேண்டும். நான் மீண்டும் வலியுறுத்துகிறேன், 36-வது திருத்தம் ஒரு அரைவேக்காட்டுத் திருத்தம். அதற்குக் காரணம், சிக்கிம் நம்முடைய புரொட்டக்ஷனில் இருக்கும் பகுதி. சிக்கிம், பூடான் இரண்டு நாடுகளையும் பொறுத்தவரையில் உலக அரங்கிலே இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாகக் குரல் எழுப்பி வந்தோம். நம்முடைய கருத்து எதுவோ அதுவே சிக்கிமின் கருத்தாகவும், பூடானின் கருத்தாகவும் சொல்லப்பட்டது, அந்த நாடுகளால் ஒத்துக் கொள்ளப்பட்டது, உலக அரங்கிலேயும் ஒத்துக் கொள்ளப்பட்டது. இன்றைக்கு சீனா எவ்வளவு பெரிய பகைநாடாக இருக்கிறது என்பதை அறிவோம். நம்முடைய பாதுகாப்பின் அடிப்படையில் செய்யும் செலவு, சீன நாட்டின் காரணமாக, அவர்களுக்கும் நமக்கும் இருக்கும் உறவு சற்றுச் சிதைந்ததன் விளைவாக ஏற்படும் செலவாகும். காஷ்மீர் பாகிஸ்தானால் உலக அரங்கில் பிரச்சினையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு காஷ்மீர் பிரச்சினையில் மெள்ள மெள்ள வேகத்தைத் தணித்து ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க இந்தியப் பிரதமர் அவர்கள் முயற்சித்தார்கள். அது வரவேற்கப் படுகிறது, பாராட்டப்படுகிறது. அந்தக் கட்டத்தில் சிக்கிமை அது இருக்கும் நிலையிலிருந்து அதிக நெருக்கத்தோடு, நம்முடன் இணைக்கச் செய்யும் காரியம் அரைகுறையாக இருந்தால் நிச்சயமாக சீனா அந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு எவ்வளவு பயங்கரமான நிலைமையை உண்டாக்க முடியும் என்பதை நிச்சயமாக பாதுகாப்பைப் பற்றியும், அரசியல் பற்றியும் அறிந்தவர்கள் தெரிந்து கொள்வது கடினம் அல்ல.

இப்படிப்பட்ட அடிப்படையில், தெளிவாக இந்த அரைகுறை நிலை தவறு, அதைவிட முழுமையான நிலை தேவை என்று குறிப்பிட்டிருக்கிறோம். திரு. செழியன் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியதைப் பற்றி ஆலடி அருணா அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகத்திலேயே

[திரு. செ. கந்தப்பன்] [1975 மே 2

அந்தக் குறிப்பு இருக்கிறது. ஏன் அவசரப்படுகிறீர்கள், செய்கிற காரியத்தை நிதானமாக, ஆழ்ந்து கவனித்துச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். மாநில சுயாட்சி அடிப் படையைக் கொஞ்சம் மாற்றுவதுபோல அல்லது அதன் தன்மையைக் குறைப்பதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்க வேண்டியதிருக்க வரவேற்கிறார்கள் என்ற கண்ணோட்டத்தோடு சிலர் பேசினார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சிக்கிம் சம்பந்த மான அரசியல் அடிப்படையை மறந்துவிட முடியாது. மண்ணோடு மண் சேர்கிறது என்பதற்காக மட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லவில்லை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்வதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. இந்திய நாடாளுமன்றம் தன்னுடைய வரலாற்றில் முதன்முறையாக, அரசியலமைப்புத் தோன்றியதற்குப் பிறகு முதன்முறையாக, ஒரு மாநிலத்தின் மக்கள், அதுவும் அவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர் கள்கூட அல்ல, வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஏகோபித்த ஒரு கருத்தைச் சொன்னார்கள் அல்லது பெரும்பான்மைக் கருத்தைச் சொன்னார்கள் என்பதற்காக அதை முழுமையாக ஏற்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்திருக்கிறது. அந்தப் பெருந் தன்மையை ஜனநாயக உணர்வை நான் வரவேற்கிறேன், பாராட்டு கிறேன். எனவே, வேறொரு நாடு—இந்த நாட்டின் அங்கம்கூட அல்ல அது—அந்த நாட்டின் பெரும்பான்மையை மதித்த அரசு, இந்த நாட்டின் அங்கமாக இருக்கின்ற தமிழ்நாட்டின் பெரும் பான்மையையும் ஒருகாலத்தில் மதிக்கும் என்பதற்கு அடித்தளம் எடுக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் எங்கள் கருத்து வலுப் பெறுகிறது, எங்கள் கருத்து ஊக்கம் பெறுகிறது, எங்கள் கருத்து எதிர்காலத்தில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நண்பர்கள் திசை திருப்புகிறார்கள்.

பிரதமரை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன், இந்த நாடு அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த நாட்டு மக்களல்ல சிக்கிமிலே உள்ள மக்கள். இந்த நாட்டிற்கு வெளியிலே யிருந்த மக்கள். இந்தச் சட்டம், அரசியல் திருத்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் கையெழுத்தாகும்வரையில் அவர்கள் இந்திய மக்கள் அல்ல.

1975 மே 2] [திரு. செ. கந்தப்பன்]

அவர்கள் சிக்கிம் மக்கள்தான். கையெழுத்தான பிறகு இந்திய மக்களாகப் போகிறார்கள். சுமார் 2 லட்சம் மக்கள்தான் அந்த நாட்டுக் குடிமக்கள். எல்லைப்புறத்தில் வாழ்ந்து வரும் அந்த நாட்டு மக்கள் மன்னரைத் தூக்கி எறிந்த பிறகு இந்திய மக்களாகிறோம் என்று கேட்டார்கள். மக்களுடைய குரலுக்கு மதிப்புத் தருகிறேன் என்ற வகையில் இந்தியப் பிரதமர் சரி என்று முடிவு செய்து தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவ்வளவு பண்போடு ஜனநாயகப் பிரதமராக வெளிநாட்டு மக்களுக்கே இவ்வளவு மரியாதை தந்தார்கள் என்றுல் இந்த நாட்டிலேயே இருக்கக்கூடிய தமிழ் மாநிலத்திற்கு, எதிர்காலத்திலே அதிக உரிமைகள் வேண்டு மென்று தீர்மானம் போடுகிறபோது நிச்சயமாக அதற்கு வரவேற்புக் கொடுப்பார்கள். அந்த அடிப்படையில் தான் பார்க்க வேண்டும். அதுதான் அடிப்படையே.

மன்னர் சோக்கியால் கேட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. சிக்கிம் நாட்டு மக்கள் கேட்டார்கள். பாரதப் பிரதமர் மக்கள் குரலுக்கு மதிப்பளித்தார்கள், என்ற இரண்டாவது அம்சம் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை அதிகமாகக் கவருகிற அம்சம். ஆகவே, மற்றவர்களை விட இரட்டிப்பாக இதை வரவேற் கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டமன்றம் கூடாத நேரத்திலே தனிச் சிறப்பம்சமாகக் கருதி சிறப்பு நிகழ்ச்சியாக, சிறப்பாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி நம்முடைய இந்தச் சட்டமன்றத்தின் ஏகோபித்த ஒப்புதலைப் பெற வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நல்ல காரியத்தைச் சரியான நேரத் தில் உடனடியாக நிறைவேற்றி அனுப்புகிற முயற்சியில் ஈடுபட்டிருக் கின்ற நம்முடைய அரசாங்கத்தைக் கண்டிப்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆளுநரைக் குறித்து அல்லது மசோதாவில் இருக்கும் உள் அங்கங்கள் குறித்து நிச்சயமாக விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன். காரணம்—சிக்கிம் நாட்டு மக்களுக்கு மதிப் பளித்து அவர்கள் உரிமையைப் பெரிதாக எண்ணி இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நம்முடைய ராடிபிகேஷனுக் காக வந்திருக்கிறது. அந்த சிக்கிம் பூகோள அமைப்பில் எப்படி அமைந்திருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். பெரும்பகுதி

[திரு. செ. கந்தப்பன்] [1975 மே 2

மாநிலங்கள் இதற்கு அனுமதி கொடுத்து இது சட்டமாக ஆக்கப் படுவதற்கு முன்னுலேயே சீனுவின் குரல் எந்த அளவுக்கு உரத்திருக் கிறது, எந்தெந்த அடிப்படையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், சீன நாட்டிலிருந்து வருகிற எச்சரிக்கைகளையும் பார்க் கிறபோது, திபெத்தைச் சீனு இணைத்துக் கொண்டதற்கு காலம் கடந் தாவது பழி வாங்குகிறோம் என்று அவர்கள் நினைக்கிற அளவுக்கு அவர்கள் சொற்களில் வேகம் தொனிப்பதைப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட கட்டத்திலே ஆளுநர் உண்மையிலேயே டில்லியால் நியமிக்கப்படுபவர் ; மேலோட்டமாகப் பார்க்கிறபோது ஆளுநருக் குச் சில தனி அதிகாரங்களைத் தந்திருக்கிறார்கள். மக்கள் மன்றம் சொல்லுகிற கருத்துக்களின் அடிப்படையில்தான் முழுமையாக இயங்க வேண்டுமென்றில்லாமல் ஆளுநர் டெல்லியிடத்திலும் கேட்டு அதன்படி நடந்தாக வேண்டுமென்ற நிலைமையை உண்டாக்கி யிருப்பது அந்த மாநிலத்தின் உரிமையைப் பாதிப்பது போல் அமைந் திருக்கிறது என்ற வாதத்தை, குறிப்பாக அண்ணு திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் செய்தார்கள். குழந்தைப் பருவத்தில் இருக்கும் அந்த நாடு—மாநிலம்—இப்போதுதான் இணைக்கப்பட இருக்கிறது. இனிமேல்தான் அந்த மாநில மக்கள் இந்திய மக்களாக ஆக இருக்கிறார்கள். அந்த மாநிலத்திற்கும், சீனுவுக்கும் இருக்கிற பூகோள நெருக்கம்—இதை எல்லாம் மனதில் வைத்துப் பார்க்கிற போது, ஆரம்ப காலத்தில் இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு அல்லது டில்லியின் நேரடிக் கண்காணிப்பு—டிபென்ஸ் அடிப்படையில் சொல்லுகிறேன் ; டில்லியின் கண்காணிப்பை என்றைக்கும் ஏற்றுக் கொள்வதாகப் பொருள் அல்ல—ராணுவ ரீதியாகத் தேவை என்பதே தவிர, வேறு அம்சம் அல்ல. அதைப் பிரதானமாக வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை நோக்குகிறோம்.

மக்கள் உரிமை முக்கிய பிரச்சினைதான், மறுக்க முடியாது. இந்தியர்கள் உள்ளத்தில் அதைவிடப் பிரதானமாக மேம்பட்ட பிரச்சினையாக டிபென்ஸ் இருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படையில் நோக்குகிறபோது இந்த மசோதாவின் ஒவ்வொரு அம்சமும் மிகக் கூர்மையாக, பிரத்தியட்ச நிலைமைக்கேற்ப ஆலோசிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை முழு மனதோடு முழுமையாக ஆதரித்து, முன்னவர் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, அமர்கிறேன். வணக்கம்.

1975 மே 2]

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I welcome the Resolution moved by the Hon. Leader of the House to make Sikkim part and parcel of the Indian Union, by amending the Constitution.

Sir, Sikkim would become the 22nd State in India and that would strengthen the hands of the Indian Union, and it is really a welcome feature to add more States to strengthen the Indian Union. In democratic countries, it is only the will of the people that will win. For instance, the Chogyal who was doing harmful activities in Sikkim has been thrown away by the people there and they have passed a resolution in their Assembly that Sikkim should join the Indian Union. It shows that the people's will will prevail in any country. In the refrendum held there, 50,637 people have voted for joining the Indian Union and 1,496 people, against it. In the Statement of Objects and Reasons appended to the Bill, so many reasons have been mentioned. The Chogyal who was acting against the interest of Sikkim by joining hands with Pakistan and China and engaging in harmful activities. was thrown away by the Sikkimese people and they have made a request to join the Indian Union.

Sir, it is proposed to include Sikkim in the First Schedule to the Constitution and to allot to the State of Sikkim one seat in the House of the people and one seat in the Rajya Sabha. This is a welcome feature and it will strengthen India in view of the fact that cordial relationship exists between China, Pakistan and U.S.A. The Sikkimese people have done the right thing in joining India and becoming Indians.

Thank you, Sir.

திரு. பெ. சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று காலைப் பத்திரிகைகளில், தரமான சில ஆங்கிலப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் நாமெல்லாம் மகிழ்ச்சியடையக் கூடிய செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். ஜமைக்காவில்

[திரு. பெ. சீனிவாசன்] [1975 மே 2

நடைபெறுகிற காமன்வெல்த் பிரைம் மினிஸ்டர்ஸ் கான்பரன்சில் கலந்து கொள்ளுகிற நம்முடைய தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் நம்முடைய நாட்டுக்கும் தனக்கும் மிகப் பெரிய புகழை ஈட்டுகின்ற வகையில் அவருடைய நடவடிக்கையைப் பற்றி குறிப்பிட்டு "லண்டன் டைம்ஸ்" என்ற பத்திரிகை "ஸ்டார் ஆப் தி கான்பரன்ஸ்" என்று இந்திரா காந்தியை வருணித்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது. அந்த அளவுக்கு நம்முடைய பிரதமர் தான் ஈட்டுகின்ற புகழால் நம்முடைய நாட்டுக்கு மிகப் பெரிய ஒரு மரியாதையை உலக அரங்கில் உருவாக்குகிறார்கள். அப்படி பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றுதான் சிக்கிம் இணைப்பும்.

கவர்னருக்குத் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பற்றியும், சிக்கிம் இந்தியாவோடு இணைய ஏற்பட்ட சூழ்நிலைகளுக்கு யார் காரணம் என்பதைப் பற்றியும் பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த இணைப்புக்கு முழு முக்கியமான காரணம் நம்முடைய பிரதமர் இந்திரா காந்தியின் ராஜதந்திரமே தவிர, வேறு எதுவும் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜவகர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் அன்றைக்கு திபெத்தை சீனா சேர்த்துக் கொண்டபோது நாமெல்லாம் பலமாகக் கண்டனம் செய்தோம். நாம் செய்யத் தவறியதை சீனா செய்து விட்டது என்ற ஆத்திரத்தின் அடிப்படையில் நம்முடைய கண்டனம் அமைந்திருந்தாலும் அன்றைக்கு சர்வாதிகாரியின் ஆக்கிரமிப்பு என்ற அடைப்படையில் கண்டித்தோம்.

[நண்பகல் 12-00]

நம்முடைய கண்டனம் ஒரு வகையில் நியாயமாக இருந்தாலும், இன்னொரு வகையில் திபெத்தை அப்போது ஆண்டு கொண்டிருந்த தலாய் லாமா, பஞ்சன் லாமா போன்றவர்கள் சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்தாலும் இந்தியா தலாய் லாமாவிற்கு புகலிடம் கொடுத்து இன்று வரை அந்த தலாய் லாமாவிற்காக அரசுப் பணத்தை நாம் வீணாக செலவு செய்து கொண்டிருக்கிறோம். மனிதத் தன்மை அடிப்படையில் அன்றைக்கு திபெத் மக்களுக்கு நாம் அனுதாபம் காட்டியது சரியாக இருந்தாலும்கூட, சீனாவின் நடவடிக்கைகளை கண்டித்ததோடு விட்டுவிடாமல் இன்று வரை தலாய் லாமா என்ற ஒரு பெரிய சுமையை இழுத்துக் கொண்டு

1975 மே 2] [திரு. பெ. சீனிவாசன்]

வருவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஆகவே, இனிமேலாவது, நடந்து முடிந்து விட்ட ஒரு காரியத்தை, சீனு திபெத்தை ஆக்கிரமித்தது என்ற அந்தப் பிரச்சினையை விட்டுவிடு நம்முடைய பிரதமர் அவர்கள் சீன நாட்டோடு நட்புறவை ஏற்படுத்துவார்களேயானால் அவர்களது ராஜதந்திரத்திற்கு இன்னும் பெரியதொரு வெற்றி கிடைக்கும்.

சில பிரச்சினைகளில் சீனுவோடு நாம் இன்று ஒன்று சேர்ந்திருக்கிறோம் என்பதைக் காட்டும் வகையில் ஜமைக்கா நாட்டில் நம் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியுள்ளது—அங்கு பெரும்பாலான நாடுகள் ஆன்டி–கம்யூனிஸ்ட் நாடுகளாக இருந்தாலும் கூட—நம் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் துணிந்து தெற்கு வியட்நாம் வெற்றியைப் பாராட்டி அங்கு ஏற்பட்டிருக்கிற புதிய ஆட்சியை வரவேற்று அதை காமன்வெல்த் நாடுகள் வரவேற்க வேண்டும் என்றும் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே, பலத்த கண்டனங்களுக்கிடையே முழங்கியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையில் சீனுவும் நாமும் ஒன்றாக இருக்கிறோம். அதேபோல் திபெத் பிரச்சினையை விட்டுவிட்டு சீன நாட்டோடு நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுவோமேயானால் நம் பாதுகாப்புச் செலவில் பாதிக்குமேல் நாம் குறைத்துக்கொள்ள முடியும். அதை நம் பிரதமர் அவர்கள் நிச்சயம் செய்வார்கள் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது பிரதமர் அவர்கள் எந்த அளவிற்கு இன்று உலக அரங்கில் நம் நாட்டின் பெருமையை நிலைநாட்டி வருகிறார்கள் என்பதற்கான படிப்படியான ஆதாரங்களை நாம் பார்க்கிறோம். உலக சரித்திரத்திலே ஒரு புதிய நாட்டை உருவாக்கிய பிரதமர் என்ற முறையில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பங்களா தேஷ் பிரச்சினையில் மிகப் பெரிய புகழைப் பெற்றார்கள்.

நம் நாடு வறுமை மிக்க நாடு. ஜனத்தொகை பெருக்கம் மிக்க நாடு. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற நாடு. இவ்வளவு பெரிய சிக்கல்கள் இருந்தும், இவ்வளவு பெரிய சங்கடமான சூழ்நிலையிலும் உலகப் பெரும் வல்லரசுகளுக்குப் போட்டியாக இந்தியாவும் அணுகுண்டு வெடிக்கமுடியும், ராக்கெட் விட முடியும் என்பதை

[திரு. பெ. சீனிவாசன்] [1975 மே 2

நிலைநாட்டுகிற அளவிற்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். அவர்களது சாதனைகளில் ஓர் அம்சமே இந்த சிக்கிம் பிரச்சினையே தவிர, இதில் ஆளும் கட்சி நண்பர்கள் மாநில சுயாட்சிக்கு ஆதாரம் கிடைத்திருக்கிறது என்று இல்லாத ஒன்றை தேடிக் கண்டுபிடிப்பது அவ்வளவு பொருத்தமுடைய தல்ல.

இன்று உலக அரசியல் அரங்கில் இந்திய நாட்டின் பெருமையை நிலைநாட்டுகிற இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் நடவடிக்கை களில் சிக்கிம் இணைப்பு ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். அதை நாம் அனைவரும் வரவேற்கிற முறையில், இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற முன்னவர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்தத் தீர்மானத்தை மற்றவர்கள் எல்லோரோடும் சேர்ந்து நானும் ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி. துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் அவைமுன் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக நான் பெருமை யுடனும் பூரிப்புடனும் வரவேற்கிறேன்.

எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் இது எப்படி வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி என்பதையும், நாம் பெருமையும் மகிழ்ச்சியை யும் அடையக் கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். முடியாட்சியை உதறிவிட்டு மக்கள் ஆட்சியை ஜனநாயக முறையில் ஏற்படுத்துவதற்காக முன்வந்துள்ள சிக்கிம் மக்களை நான் முதன்முதலாகப் பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த சிக்கிம் நாடு எப்படி நம் எல்லைக்குப் பாதுகாப்பான ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். சீனக்காரனின் தாக்குதலுக்கு இடம் அளிக்கக் கூடிய வகையில் உள்ள இடமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தாலும்கூட, இந்த நாட்டை எடுத் துக்கொள்ளக்கூடிய படை பலம் இருந்தும்கூட நாம் இந்த நாட்டை இராணுவத்தின் மூலம் நம் நாட்டோடு இணைத்துக்கொள்ளவில்லை. ஆனால், அதே நேரத்தில் அங்குள்ள மக்கள் தாமாகவே முன்வந்து தீர்மானித்து நம் நாட்டோடு சிக்கிம் சேருவது என்ற தீர்மானத்தை

1975 மே 2] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தை நம் பிரதமர் அவர்கள் ஜனநாயக முறையில் ஏற்றுக்கொண்டு அதை நம்முடைய நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தின் வாயிலாக இந்த அவைக்கு வந்திருக்கிறது.

சிக்கிம் நாடு நம் தாய் நாட்டோடு ஒரு அங்கமாக இணையக் கூடிய சரித்திரப்பிரசித்தி பெற்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக நம் பிரதமர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இதை, நம் நாட்டைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறுகிற சீனு போன்ற நாடுகள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தை நல்லமுறையில் நடைமுறைக்குக் கொண்டு வருகிற நாடு அகில உலகிலே நம் இந்திய நாடுபோல வேறு எந்த நாடும் இருக்கமுடியாது என்பதை இந்த சிக்கிம் இணைப்பு எடுத்துக்காட்டுகிறது. பல மதங்கள், பல ஜாதிகள், அதேபோல் பல கலாசாரங்களைக் கொண்ட மக்கள் பல பகுதிகளில் இருந்தும்கூட எல்லோரும் சேர்ந்து நல்லமுறையில் ஜனநாயகத்தை வளர்க்கமுடியும் என்று அகில உலகிற்கு இந்திய நாடு ஒன்றே எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கிறது. அதேபோல் இந்த சிக்கிம் நாட்டு மக்களின் கலாசாரத்திற்கும் சமய உணர்வுகளுக்கும், இந்திய நாட்டு மக்களின் கலாசாரத்திற்கும் சமய உணர்வுகளுக்கும் இடையே வேறுபாடு இருந்தும்கூட அவர்களையும் நம்மோடு இணைத்துக் கொள்ள ஜனநாயக முறையில் முயன்றிருக்கிறோம் என்றால் அது அகில உலகிற்கே ஒரு பாடமாக இருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியாகும் என்பதைக்கூறி நாம் எல்லோரும் இதை பெருமையோடும் மகிழ்ச்சியோடும் ஆதரிக்கவேண்டும் என்று கூறி மகிழ்ச்சியோடும் பெருமையோடும் நான் இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு மாத்திரமல்லாமல் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கக்கூடிய ஒரு கட்டத்தில் நாம் இருக்கிறோம். காரணம், இந்த சிக்கிம் பிரச்சினை அரசியலில் பல சிக்கல்களுக்கு தீர்வு காண முயன்றிருக்கிறது. இன்னும் உள்நாட்டிலும் சரி அல்லது அன்னிய நாட்டிலும் சரி அரசியல் சிக்கல்களை ஏற்படுத்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 மே 2

திக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல பதிலாக இந்த சிக்கிம் பிரச்சினை விளங்குகிறது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது.

அது மாத்திரமல்ல. இந்தியாவின் பொற்காலமாக இன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் ஆட்சி அமைந்திருக்கிறது என்று சொன்னால் அதையும் யாரும் மறுக்க இயலாது. நம் இந்தியாவின் பெருமை பல வகைகளிலும் அவர்களது ஆட்சியில் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகிறது என்பதை நாம் பெருமையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். வளருகிற ஒரு நாடு வளர்ந்த நாடுகளோடு ஈடு கொடுக்கமுடியும் என்று சொல்லக்கூடிய அளவில் அணுகுண்டு பரிசோதனையானாலும் சரி, அல்லது விண்வெளி கிரக மானாலும் சரி, அண்டை நாடுகளோடு எப்படி நடந்துகொள்வது என்பதானாலும் சரி, பக்கத்து நாடுகளோடு எப்படி பிரச்சினைகளை சமாளித்துக்கொள்கிறோம் என்பதானாலும் சரி, காமன்வெல்த் நாடுகளில் இந்தியாவின் பாகம் என்ன என்பதுபற்றியானாலும் சரி, எல்லைப் புறங்களில் உள்ள மாநிலங்களில் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதானாலும் சரி, ஒரு தனி ராஜதந்திரத்தோடு உலகிற்கு எடுத்துக் காட்டாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற ஒரே தலைவி பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஆவார் என்பதை எடுத்துச் சொல்ல இது ஒரு அரிய வாய்ப்பாகும்.

21 மாநிலங்களாக இருந்தது இப்போது 22 ஆகப் போகிறது. சிறிய நாடுகள் எப்போதும் பெரிய நாடோடு இருந்தால்தான் பலம் உண்டு, மரியாதை உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது. இதை நான் சொல்லக் காரணம், எனக்கு முன்பு பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இதை தங்களுக்கு பயன் படுத்திக்கொள்ளலாம் என்று யோசித்தார்கள். இதை வைத்துக் கொண்டு அதிக அதிகாரங்கள் கேட்கலாம் என்று பார்க்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். அடிக்கடி உங்களில் பலர் சொல்வது வழக்கம். நாங்கள் பிரிவினை வாதத்தை கைவிட்டுவிட்டோமே தவிர பிரிவினைக்குள்ள காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவை இன்னும் எங்களை விட்டுப் போகவில்லை என்று சொல்வது வழக்கம். இந்தத் தீர்மானத் திற்கு அப்புறமாவது அவர்கள் அப்படி எண்ணுவதை, உங்கள் உள்ளத்தில் பிரிவினை வேண்டுமென்பதற்காக ஏதாவது காரணங்கள்

1975 மே 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இருந்து தொக்கிக் கொண்டிருந்தால் இந்த சிக்கிம் பிரச்சினையோடு அதை சேர்த்து புதைத்துக்கொண்டு விடுங்கள் என்று சொல்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாகும்.

ஒரு சிறிய நாடு பலம் பொருந்திய ஒரு நாடோடு சேருவது எதற்காக? 21 மாநிலங்கள் உள்ள இந்தியாவோடு தனி நாடாக இருக்கிற சிக்கிம் நாடு சேருவானேன்? தனி நாடாக இருப்பதைவிட பலம் பொருந்திய ஒரு உறுதிபடைத்த நாடோடு அதன் ஒரு அங்கமாக இருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த சிக்கிம் இணைப்பிற்குப் பிறகு நாடு ஒன்றுக இல்லாமல் சிறு சிறு நாடுகளாகி அதிகாரங்களைச் சிதறடித்துக்கொடுக்கவேண்டும் என்று யாருக்காவது உள்ளத்தில் எண்ணம் இருந்தால் இன்றைக்கு அது கடைசி நாளாக இருக்கட்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவின் பெருந்தன்மையை உலகுக்கு இது எடுத்துக்காட்டு கிறது. நமக்கு அண்டைநாடுகளாக இருப்பவர்கள் என்ன சொல் கிறார்கள், " இந்தியா பெரிய நாடு, எங்களை விழுங்கிவிடுமோ " என்று பயப்படுகிறார்கள். பாகிஸ்தான் சொல்கிறது, " இந்தியா பெரிய நாடு, நாங்கள் சின்ன நாடு, எங்களை விழுங்கிவிடுமோ என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிறது ", சிலோன் என்ன சொல்கிறார்கள், " இந்தியா பெரிய நாடு, நாங்கள் சின்ன நாடு, சிறிய நாடாக இருந்தால், எங்களை விழுங்கிவிடுவார்களோ என்று அச்சமாகவிருக் கிறது " என்று சொல்கிறார்கள். நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம், சிறிய நாடாக இருந்தாலும் சரி, பெரிய நாடாக இருந்தாலும் சரி, இந்தியாவிற்கு அவைகளைக் கட்டாயமாக ஆக்கிர மிக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டு வதற்கு இது எடுத்துக் காட்டாக இருக்கிறது.

ஏன் இதைச்சொல்கிறேன் என்று சொன்னால், கிழக்கு வங்கத்தில், பங்களா தேஷ் பிரச்சினையில் நாம் எவ்வளவு வெற்றிகரமாக இருந்த போதிலும், எங்களுக்கு அண்டைநாட்டின் நிலம் ஒரு இஞ்ச் கூட வேண்டாம் என்று சொல்லி, வெற்றிமேல் வெற்றி குவிந்து வந்த நேரத்தில், போரை நிறுத்தச்சொல்லிவிட்டார்கள். எங்கே வெற்றியின் வெறிக்கு ஆளாகி விடுவோமா என்ற அச்சத்திலேயே அதைச் செய்தார்கள். அந்த மக்களின் எண்ணங்கள் நடைமுறைக்கு

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 மே 2

வருகின்றன என்ற நேரத்தில், நாம் வெற்றி குவித்து இருந்தாலும், போரை நிறுத்தி, அந்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழியும் வகுத்துக்கொடுத்தோம்.

சிக்கிம் சிறிய நாடாக இருந்தாலும், நம் எல்லையில் அவர்கள் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களை நாம் ஆக்கிரமித்து இணைத்துக் கொள்ளவில்லை. அந்த நாட்டு மக்கள் மன்றம் தீர்மானம் போட்டு, அங்கே ஒரு "ரெபரெண்டம்" நடத்தி அதில் 90,000 வோட்டர்கள் இருக்கிறார்கள், அவர்களில் 59,000 பேர் இந்தியாவோடு இணைய வேண்டும் என்றும், 1,496 பேர் தான் அதற்கு எதிர்ப்பாகவும் ஓட்டளித்தார்கள். அந்த மக்களின் எண்ணத்தை மதிக்க வேண்டும் என்ற பண்பாட்டின் அடிப்படையில் நாம் இன்றைக்கு இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவுகொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மெஜாரிட்டி மக்களின் எண்ணத்தைத்தான் நாம் பிரதிபலிக்க முடியுமே தவிர, தனிப்பட்டவர்கள் தங்களின் சௌகரியத்திற்காகப் பேசுவதை நாம் மக்களின் எண்ணங்கள் என்று எடுத்துக்கொண்டு விடமுடியாது. இந்தத் தீர்மானத்தின் மூலம் நான் என்ன அறியமுடிகிறது என்று சொன்னால், பெரிய நாடோடு இணைந்து வாழ்வதில் தான் மக்கள் அதிகம் நாட்டம் செலுத்துகிறார்கள் என்பது பிரதிபலிக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் நாம் பெரிய நாடாக இருந்தாலும், பெரிய மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும், அடுத்த நாட்டை எடுத்து விழுங்கி விடவேண்டும் என்ற தவறான எண்ணம் நம் மனதில் அறவே இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, கவர்னர் அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையா என்று கேட்டார்கள். எல்லையில் இருக்கும் நாம் கொஞ்சம் அதிகாரங்களைத் தாராளமாகத் தரவேண்டியிருக்கிறது. காஷ்மீர், பூடான், சிக்கிம், அருணாசலப் பிரதேசம், மேகாலயா இப்படி எல்லையில் இருக்கும் மாநிலங்களுக்குப் பல விதமான சலுகைகளை—மற்ற மாநிலங்களுக்கு இல்லாத சலுகைகளை—நாம் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சலுகைகள் எல்லையில் இருக்கும் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டால் தான் நல்லமுறையில் நாட்டின் பாதுகாப்பு இருக்கும். அதைப் பற்றிக் குத்தலாகப் பேசக் கூடாது. அப்படிப்பேசினால் அவர்களின் தேசப்பற்றைச் சந்தேகிக்க வேண்டும் என்று சொல்லிவிடலாம்.

1975 மே 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஐயோ, காஷ்மீரத்திற்கு அதிகச் சலுகை கொடுக்கலாமா, அங்கே கொடுத்தால் இங்கேயும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். காஷ்மீரத்திற்குக் கொடுத்தீர்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்று சொல்வார்களானுல், நாட்டின் பலத்தையும், பாதுகாப்பையும் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள் என்று தான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சிக்கிம் கவர்னருக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னுல், அது எல்லையில் இருக்கும் நாடு, இப்போது தான் நம்மோடு இணைந்து இருக்கிறது, அவற்றில் ஆரம்பக் காலத் தொல்லைகள் சில இருக்கும், அந்தத் தொல்லைகளைச் சமாளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் சில அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து இருக்கிறோம் என்று நம்முடைய பாதுகாப்பு மந்திரி சவான் அவர்கள் அழகாக எதிர்க் கட்சிகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். நாம் இந்த இணைப்பை மிகவும் உயர்த்திப் பேசவேண்டும். வேறு வகையில் யாராவது பேசியிருந்தாலும்—பேசியிருக்கிறார்கள்—உயர்த்திப் பேசவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். சிக்கிம் இணைப்பு நமக்குப் பெருத்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இங்கேயிருக்கும் தமிழக அரசு மாநில சுயாட்சி என்று கூறி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதன் அடிப்படையில், இப்போது நகராட்சிகள் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். மாநகராட்சிகள் கேட்கின்றன, பஞ்சாயத்துகள் கேட்கின்றன. அதிக அதிகாரங்கள் கேட்பதால் நீங்கள் தாராளமாகத் தந்து விடவில்லை. ஒரு வீதியின் பெயரை மாற்றவேண்டும் என்றுலும், இங்கே தலைமைச் செயலகத்திற்குத் தான் வரவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் நிர்வாகச் சிக்கல்கள். இந்த நிர்வாகச் சிக்கல்களை மனதில் வைத்துக்கொண்டு, நாங்கள் அதிக அதிகாரங்கள் கேட்கப்போகிறோம், இதுவே எங்கள் தேர்தல் பிரகடனம் என்று சொல்லிக்கொண்டு, பேசிக்கொண்டு இருப்பது மக்களை ஏமாற்றிக்கொண்டு இருப்பதற்கு ஒப்பாகும். அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்வது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 மே 2

நாம் எல்லோரும் ஒரு மனதாக இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றி, பாரதப் பிரதமருக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து, இனி மேலாவது பிரியவேண்டும் என்று நினைக்கிறவர்கள் அப்படி எண்ணக் கூடாது என்று சொல்லிக்கொண்டு, என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: துணைத் தலைவரவர்களே, நமது சபைக்கு முன்னால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானத்தின் மீது எனது கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

நமக்கு முன்னால் இருக்கும் தீர்மானம் அரசியல் சட்டம் 368 பிரிவின் கீழ் சில முக்கியமான அரசியல் சட்ட திருத்தங்கள் எல்லாம் இந்தியாவில் இருக்கும் மாநிலங்களில் பொதுவாக ஆதரிக்கப்பட வேண்டும் என்று இருக்கக்கூடிய முறையில் தான் இப்போது வந்து இருக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய சட்டமன்றம் அரசியல் சட்டத்தைத் திருத்தலாமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்று ஆலோசனை சொல் வதற்கு நமக்கு அதிகாரம் உண்டு. ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத் தில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்று சொன்னால், நம்முடைய சட்டமன்றத்திலே சில குறிப்பிட்ட பிரச்சினைகளின் அடிப் படையில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் அல்லது இன்றைக்குப் பொதுத் துறை இருக்கிறது, அந்தப் பொதுத் துறை வளர வேண்டும், அல்லது வேறு பொருள் குறித்தும் தீர்மானம் நிறைவேற்றலாம். அப்படித் தீர்மானம் நிறைவேற்றி அரசியல் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் அதை அமலுக்குக் கொண்டு வரலாம். அதற்கு இடம் இருக்கிறது.

இந்த கோவில் அர்ச்சகர்கள் சம்பந்தமாகக் கூட இந்த அவையில் திருத்தம் கொண்டு வரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக் கிறது என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கும் சட்டமன்றமும் அரசியல் சட்டத் திற்குட்பட்டு நடக்கவேண்டும். அதன் அடிப்படையில் அந்த அதிகாரங்களில் நம்முடைய தகுதி என்ன என்று தெரிந்துகொள்

1975 மே 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வதற்குச் சந்தர்ப்பமும் வாய்ப்பும் அரசியல் சட்டம் கொடுத்து இருக்கிறது. அந்த அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பது நம்முடைய எண்ணம்.

இந்தத் தீர்மானம் நமக்கு வந்து இருக்கும் பின்னணி என்ன? பொதுவாக நேற்று உலகத்தில் இருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய விழாவாக "மே தினத்தை"க் கொண்டாடினார்கள். நம்முடைய மாநிலத்தில் கூட மே தினம் கொண்டாடுவதற்காகப் பூரண விடுமுறை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட மே தினத்தில் உலகத்தில் எந்த இடத்தில் அதைக் கொண்டாடினாலும், அவர்கள், எந்தக் கருத்துக் கொண்டவர்களாக இருந்தாலும், தொழிலாளர் வர்க்கம் என்ற முறையில் சிறப்பாக சமீபத்தில் நடந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுத்தான் அவர்கள் மே தினத்தைக் கொண்டாடினார்கள். அந்த நிகழ்ச்சிதான் 30 ஆண்டுக் காலமாக அடிமைமேல் அடிமைபட்டுக் கடைசியில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்தி—அன்றைக்கு முடிவில் வெற்றி பெற்று விடுதலைக் கொடியை சைகோவில் ஏற்றியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்திதான்.

பொதுவாக, இந்தோ சீனா என்ற பகுதி யுத்தம் முடிந்த பிறகு பல நாடுகள் சுதந்திரம் அடைந்ததைப்போல—இந்த நாடு சுதந்திரம் அடைந்தாலும் கூட லாவோஸ், கம்போடியா, தென் வியட்நாம், வட வியட்நாம் என்பதாகப் பல பலத் துண்டுகளாக அப்படி அப்படியே அடிமைப்பட்டுவிட்டன. இதன்காரணமாக இத்தனை ஆண்டுகளாக அந்நாட்டு மக்கள் அடைந்த கஷ்டங்களை நாம் அறிவோம். அவர்களது தியாகத்தைப்பற்றி எத்தனையோ புத்தகங்களை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு அந்நிய உதவி தேவையில்லை என்று பல க்ருப்புகளாக இருந்தாலும் ஒன்று சேர்ந்து அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று இன்றைக்கு வெற்றி கண்டிருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தைக் கூறக் கருதினேன். இந்த வெற்றி ஏற்பட்ட சமயத்தில் பாரதப் பிரதமர் இந்தியாவில் இல்லை. அவர்கள் காமன்வெல்த் மகாநாட்டிற்காக ஜமைகாவிற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்திய சர்க்கார் பி.ஆர்.ஜி. (Provisional Revolutionary Government) என்ற அரசாங்கத்தை நாங்கள் அங்கீகரித்துவிட்டோம் என்று நாடாளுமன்றத்திலேயே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

அறிவித்திருக்கிறார்கள். இப்படி நாடாளுமன்றத்தில் அறிவித்ததை அநேகமாக எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் மகிழ்ச்சியோடு வரவேற்று இருக்கிறார்கள். இப்படி வரவேற்பதற்கு ஒரு தீர்மானத்தையே கொண்டுவரவேண்டுமென்று திரு. பூபேஷ் குப்தா தெரிவித்தார்கள். அந்த நாட்டு புதிய அரசாங்கத்தை நாம் அங்கீகரித்துவிட்டோம். இங்கே இருக்கக்கூடிய ஸ்தானீகரிடமும்—நீங்கள் இவர்களை ஆதரிப்பதாக இருந்தால்தான் இங்கிருக்கலாம் என்பதாகவும் சொல்லப்பட்டுவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நாமும் சில காரியங்களைச் செய்ய முடியும். இதுபற்றி நாமே இங்கே ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன்.

"This House greets the victorious people of South Vietnam for bringing to a successful end the 30 year old armed conflict; the Union Government deserves congratulations for prompt recognition of the Provisional Revolutionary Government as the lawful Government. This House further notes with satisfaction that one of the ten commandments of the Provisional Revolutionary Government gives protection to all foreign nationals which includes a large number of people from our State" என்ற முறையில் நாம் தீர்மானம் கொடுத்திருப்போமானால் மத்திய அரசு அங்கீகாரம் செய்திருப்பதைப் பாராட்டியிருக்கலாம். இன்னும்—கிறிஸ்துவர்கள் தான் டென் கமாண்ட்மெண்ட்ஸ் என்பார்கள்—அதுபோல இவர்கள் வகுத்துக் கொண்டுள்ள கொள்கைகளில்—எங்கள் நாட்டுக்கு விரோதம் இல்லாமல் இங்கு இருக்கக்கூடிய வெளிநாட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்போம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்களே அதையும் பாராட்டி இருக்கலாம்.

இன்றைக்குக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் தமிழர்கள் சைகோனில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தக்க ஏற்பாடுகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். அங்குள்ள தமிழர்கள் இங்கு வருவதானால் அதற்கு பாதுகாப்பு அளிப்பது—அவர்களது சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு பெறுவது ஆகியவற்றில் நாம் கொஞ்சம் கவனம் செலுத்தியாக வேண்டியும் இருக்கிறது. அதையெல்லாம் தெளிவு படுத்தியிருக்கலாம். ஆனால் இது ஒரு நாள் கூட்டமாக ஆகிவிட்டது.

1975 மே 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இரண்டு நாள் இருக்கும் என்று சொன்னல் அரசாங்கமே அதுபோல ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவது சிறப்பாக இருக்கும். இதற்கு நாடு பூராவிலும் வரவேற்பு இருந்திருக்கும். பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டு மக்களுக்கு வரப்பிரசாதமாக இருந்து இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று. இதைக்கூட ஏன் இவ்வளவு அவசரம் அவசரமாகக் கொண்டுவந்தார்கள் என்று தெரியவில்லை. பத்திரிகையில் வந்தது. நாடாளுமன்ற இரு அவையிலும் இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. It has come as the 38th amendment of the Constitution. 38-வது திருத்தமாக இது வந்திருக்கிறது. இந்தத் திருத்தத்தை ஜனுதிபதி அங்கீகரிக்கவேண்டுமென்று சொன்னல் சில விவரங்கள் வேண்டும். இந்தியாவில் உள்ள 21 மாநிலங்களில் பாதி மாநிலங் களாவது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறை வேற்ற வேண்டும். மத்திய சர்க்காரே இந்தத் தீர்மானத்திற்கு ஒரு டிராப்ட் அனுப்பியிருக்கிறார்கள். அந்த டிராப்டை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை ஏற்று இங்கே தீர்மானமாகக் கொடுத்திருக் கிறார்கள். அதில் நமது சிந்தனையையும் கொஞ்சம் செலுத்தியிருக்க லாம். கொஞ்சம் லேட்டாகக் கொண்டு வந்திருந்தால் மற்ற மாநிலச் சட்டமன்றங்களில் இதைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு அவசரம் ஏன் என்று தெரியவில்லை. இதை வைத்து அரசியல் லாபம் பெறவேண்டுமென்று நான் விரும்ப வில்லை.

ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் உண்மையாக இதை ஆதரிப்பது ஏன் என்று புரியவில்லை. ஏனென்றுல் பொதுவாக ஒரு கருத்து அவர்கள் மத்தியில் இருக்கிறது—மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும்—நாங்கள் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்—என்பது போன்ற பிரிவினை வாதமோ என்று சந்தேகிக்கக் கூடிய அளவில் கருத்து இருக்கிறபோது—பெரும்பான்மையானவர்களது கருத்தை ஏற்றுக்கொள்வது என்று அவர்கள் முடிவு செய்திருந்தால் அதிலும் குறை இல்லை.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

ஒரு சமயத்தில் இதை அரசியல் பிரச்சினையாக—தேர்தல் வருவதற்கு முன்னுல் வருகிற காரணத்தினுல் ஒரு நாளில் இதை முடிக்கக்கூடாது—3 நாளாவது இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று முடிவு செய்வார்களோ என்றுகூட நான் யோசித்து இருந்தேன். அந்த நிலைமை வரவில்லை என்பது உண்மையில் வரவேற்கத்தக்க அம்சம் தான்.

இதை நாடு பூராவும் ஏற்றுக்கொள்கிற நேரத்தில் நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு கட்சி ஒதுங்கியிருந்தது. இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

Intense nationalist and nationalist will essentially be an internationalist என்று நான் சொல்வது லெனின் கருத்து. சர்வதேச பக்தி என்பது தேச பக்திக்கு விரோதமானது அல்ல. எங்களைப் பற்றித் தவருகக்கூட மக்கள் மத்தியில் சொல்லப்படுகிறது. சர்வதேச பக்தி என்பது தேச பக்திக்கு அப்பார்ப்பட்டது அல்ல என்றுதான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தேச பக்தி என்று சொல்கிற போது தேசப் பாதுகாப்புக்கு, தேச சுதந்திரத்திற்கு எந்த இடத்தில் இருந்தும் அபாயம் வரக்கூடாது என்கிற கருத்தொற்றுமை இருக்கிறது.

இன்றைக்கு அபாயம் இருக்கிறது என்றே நாங்கள் கருதுகிறோம். வட எல்லையாக இருந்தாலும், தென் எல்லையாக இருந்தாலும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது. தெற்கே கடல்தானே என்றாலும் அங்கேயுள்ள டிகோகார்ஷியா தீவில் They have got the base and they are developing it. அதனுல் நமக்கு அபாயம் இல்லை என்று சொல்ல முடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பழைய காலத்துத் தேசிய இயக்கம் இந்த நாட்டிலே வந்து கொண்டிருக்கிறது. அந்தமாதிரியான தேசிய இயக்கத்திற்கு ஆதரவு தரக்கூடிய தீர்மானத்தைக் கொண்டுவரலாம். பக்கத்தில் இருக்கக்கூடிய சிலோனுக்கு அபாயம்—புதியதாக விடுதலை அடைந்த பங்களா தேஷிற்கு அபாயம்—அரபு நாடுகளுக்கு அபாயம்—இப்படி அபாயகரமான போக்கு இருக்கிறது. வடக்கு எல்லையில் சீன அபாயம் இருக்கிறது. பாகிஸ்தானை இந்தியாவுக்கு விரோதமாகத் தூண்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

1975 மே 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு வட எல்லையில் உள்ள சிக்கிமைப் பற்றி ரசமான ஒரு கருத்தை மற்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டவில்லை. இந்திய நாட்டில் 500-க்கும் அதிகமான அரசுகள் இருந்தன. ராஜாக்கள் இருந்தார்கள். ராஜாக்களிடம் இருந்த ராஜ்யங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிக்கிம் நாடு சிக்கிம் ராஜாவிடமே

[பிற்பகல் 12-30]

இருந்தது. அன்றைக்கு வல்லபாய் அவர்கள் இந்தியாவை ஒன்று படுத்தி, இந்த மன்னர்களுக்கெல்லாம் ஓரளவுக்கு மானியத்தைக் கொடுத்து, ஒழித்த நிலையிலே இந்தச் சிக்கிம் இராஜ்யத்தையும் சேர்த்திருக்கவேண்டும். ஆனல், நமக்குத் தலைவராக இருந்த ஜவ்கர்லால் நேரு அவர்கள் அந்தந்த நாட்டினுடைய, அந்தந்தப் பகுதி மக்களுடைய பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக, புதுச்சேரியைச் சேர்க்க வேண்டுமென்றபோது, பிரெஞ்சு மொழி அங்கே இருக்கவேண்டுமென்று சொன்ன, மிகப் பெருந்தன்மை படைத்த தலைவர் அன்றைக்கு இருந்த காலத்தில், சிக்கிமை இணைத்திருக்கவேண்டும்.

ஆனல், ஒன்றை நன்றுகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

For the development of Sikkim, every year we are spending ; for defence of Sikkim, we have been spending for the past 25 years.

அப்படி நாம் செய்து கொண்டிருக்கிறோம். அப்படி அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கப் பல காரியங்களைச் செய்கிறபொழுது, இந்த ஒரு மன்னர் வந்து சேர்ந்தார். சோக்கியால் அமெரிக்காவிலே படித்தார். அங்குபோய் படித்தவர் அமெரிக்கப் பெண்ணை கல்யாணம் செய்து கொண்டு வந்தார். அந்த நேரத்திலே, எங்களுக்கெல்லாம் இருந்த அச்சம் என்னவென்றால், அமெரிக்கப் பெண்ணை கல்யாணம் செய்து கொண்டு வந்தது மட்டும் அல்ல, பல உளவுக்காரர்களோடு தொடர்பு கொண்டுள்ள அம்மையாரை இங்கே வைத்தால், நமக்கு ஆபத்து ஏற்படுமென்பதுதான். அவர்கள் சென்னைக்குக் கூட வந்தார்கள். ஆனல், ஏன் அந்த ஊரை விட்டுப் போனர்கள் என்பதற்குக் காரணம், அவர்கள் ரொம்ப விளம்பரமாக, சுயேச்சையாக வாழ்ந்தவர். அந்த அம்மையார், சிக்கிம் இராஜாவினுடைய மனைவியென்றால், the old feudal system is still prevalent there அந்த இடத்திலே பெண்ணுக இருக்கக்கூடிய உரிமை கூட

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

இல்லாமல் போனவுடனே தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒரு வருஷத்திற்கு முன்னால் அமெரிக்காவுக்குப் போய் சேர்ந்தவர், நான் இனிமேல் இங்கே வரவேமாட்டேன் என்று சொன்னார். சொன்ன பிறகுகூட, பழைய காலத்து ஜனங்களை, எவ்வளவுதான் இம்சை பண்ணினாலும் தன்பால் நன்றாக இருக்கவேண்டும், தான் ஆடம்பர மாக இருக்கவேண்டுமென்று மன்னர் சோக்கியால், மிகவும் ஊதாரித் தனமாகச் செலவு செய்தார். அம்மக்கள் மிகவும் பின்தங்கிய மக்கள். 2 லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகமாக ஜனத்தொகையிருக்கிறது.

It is a Himalayan State ;

அது நம்முடைய பகுதியாக இருக்கிறது. அந்த ஊரைப் பற்றி ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. ஒரு சமயத்திலே நாங்களெல்லாம் ஜெயிலிலே இருந்தபொழுது, ஜெயிலிலே தகராறுகள் பண்ணுகிறீர்கள் ; ஆகவே, சிக்கிமுக்கு அனுப்பப்போகிறோம் என்று ஏற்பாடு செய்தார்கள். அப்பொழுதுதான், சிக்கிம்பற்றி எனக்கே தெரியும். சிக்கிமுக்கு அனுப்பக் கூடாது என்று நாங்களெல்லாம் விவகாரம் பண்ணி பிறகு அனுப்பவில்லை.

ஒருமுறை, பார்லிமெண்ட் உறுப்பினர்கள் எல்லோரையும் சிக்கிமுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்கள். குறிப்பாக, இந்தியாவைச் சீனா தாக்கியபொழுது, சிக்கிம் வழியாகத்தான் திபெத்துக்குச் செல்லவேண்டும். அங்கே இருக்கிற நாத்துல்லா பாஸ்—கணவாய்—வழியாகத்தான் திபெத்துக்குச் செல்லவேண்டும். It is a vulnerable spot. அதைப் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தோடு, இந்த நாதுல்லா பாஸ்ஸை சுற்றிக் காண்பிப்பதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர்களை, பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களை அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது போகக்கூடிய பாக்கியம் கிடைக்கவில்லை. இப்பொழுது, உங்களுடைய முயற்சியாலே, நீங்கள் அழைத்துச் சென்றால் அதை நாங்கள் வரவேற்கிறோம். வட நாட்டினுடைய எல்லை...சிக்கிம்மை இந்தியாவோடு சேர்த்துக் கொள்வது என்று முடிவெடுத்துள்ள இப்பொழுது சிக்கிம்மை பார்ப்பது, தெரிந்துகொள்வது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10,000 கிலோ மீட்டர் போக லாம் என்று பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1975 மே 2]

திரு. கே. டி. கே. தங்கமணி: பாஸ் கொடுத்திருக்கிறீர்கள். நன்றி, உறுப்பினர்கள் கேட்கிறார்கள், பாஸ் கொடுக்கிறோம் என்று சொல்லி இரண்டு வாரம் ஆயிற்றே, பாஸ் கையிலே காணோமே என்று சொல்கிறார்கள். அந்த பாஸையே உபயோகப்படுத்தத் தயார்.

Still the matter has to be organised by you, Sir. நீங்கள் ஆர்கனைஸ் பண்ணி ஏற்பாடு செய்யுங்கள். இங்கே இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், 50 பேரோ, 100 பேரோ, சென்று வர விரும்புபவர்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுங்கள். ரெயிலில் போய்விடலாம். அவர்கள் வரவேற்கத் தயாராக இருக்கவேண்டும். தங்க இடம் வேண்டும், சாப்பாட்டுக்கு ஏற்பாடு வேண்டும், அந்த மாதிரி ஏற்பாடுகளைச் செய்தால் ரொம்ப உதவிகர மாக இருக்கும். அது தமிழ் நாட்டிற்கு ரொம்பப் பெருமை தரக் கூடியதாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன். ரொம்ப யோசித்துத் தான் சொல்கிறேன்.

இப்பொழுதுதான் அங்கு ஒரு தேசிய இயக்கம் வளர்ந்திருக்கிறது. அந்த நாட்டு மக்கள் இன்றைக்கும் படிப்பு வாசனை அறியவில்லை, எழுத்து வாசனை அறியவில்லை. மேல் மட்டத்தில் உள்ளவர்கள்தான் படித்தவர்கள் என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, அந்த நாட்டிலே கூட ஓரளவுக்கு ஒரு அரசாங்கத்தை அமைத்தார்கள். அந்த அரசாங் கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 32 பேர்கள். அந்த 32 பேர் களையும் மன்னர் என்ன செய்தார்? அவர்களைத் தடுக்கவேண்டு மென்று பார்த்தார். அதற்கு என்ன பரிகாரம்? இங்கே நாம் பார்க் கிறோம், தந்திக்கு மேல் தந்தி வருகிறது. உசிலம்பட்டி போலிஸ் ஸ்டேஷனில் ஆட்களை அடித்திருக்கிறார்கள். அங்கே என்னவென்றால், Palace guards convert themselves into armed police and beat the political persons. அந்த அளவுக்கு மோசமான நிலைமை போனபிறகு, நிலைமை ரொம்பவும் மோசமாகப் போகிறது என்று தான் இவ்வளவு நாளாகப் பாதுகாப்பு கொடுத்தோம், இப்பொழுது இப்படி ஆகிறதே என்ற நிலைமை வருகிறது. வெளியே தப்பான பிரச்சாரம் நடக்கிறது. ஏதோ நாம் சேர்த்துக்கொண்டதாக. நேபாளமும், பூடானும் நாம் விடுதலை அடைந்தவுடனே நம்முடைய ஒரு பகுதியாக வந்திருக்கவேண்டும். அப்படி வந்திருக்கவேண்டு மென்பது பொருத்தமான விஷயம். எப்படி இங்கே இருக்கக்கூடிய மைசூர் இந்தியாவோடு சேர்ந்ததோ, எப்படி ஐதராபாத்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

இந்தியாவோடு சேர்ந்ததோ, அல்லது வேறு சிறு சிறு முடியரசுகள் நம்மோடு சேர்ந்தனவோ, அம்மாதிரி சேர்ந்திருக்க வேண்டியவை. அவர்கள் விருப்பத்திற்கு மாறுகச் செய்யக்கூடாது, அவர்கள் எல்லையில் இருக்கக் கூடியவர்கள், அதுவும் ரொம்பப் பின்தங்கிய மக்கள், மலைவாசிகளாக இருக்கிறார்கள் என்றுதான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட்டனவே தவிர, மற்றவர்கள் நினைக்கிறமாதிரி, தனியாக இருக்கிற சிறு பிரதேசத்தை இந்தியா ஆக்கிரமித்தது என்ற கருத்துப் பரவுவது ரொம்பத் தப்பு. அந்த அளவு வெளியே யாரும் சொல்லவில்லை. மிகப் பெரிய வல்லரசுகள் எல்லாம் பேசாமல் இருக்கின்றன. அதைப்பற்றி அதிக விஷயங்களைச் சொல்லவில்லை. அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள் கோவாவையும் புதுச்சேரியையும் ஆக்கிரமித்து வைத்திருந்தார்கள். அவற்றை எடுக்கிறபொழுது சண்டையே போட வேண்டியதாகயிருந்தது. இது நம்மோடு சேர்ந்திருந்தது. பிரிட்டிஷார் போன பிறகு Protectorate என்ற அளவில் 1950-ம் வருஷத்திலே ஒரு ஒப்பந்தம் செய்து, தனி அந்தஸ்து கொடுத்தது இந்த நாட்டினுடைய பெருமையேயொழிய இந்த நாட்டுக்குக் குறை அல்ல.

இன்னொரு முக்கியமான விஷயம். அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். கவர்னர் பற்றி. தனி அந்தஸ்து பெற்ற மாநிலமாக்கியாயிற்று. ஆக்கிய உடனே, இப்படி ஒரு கிளாஸ் இருக்கிறது :

The Governor of Sikkim shall have special responsibility for peace and for an equitable arrangement for ensuring the social and economic advancement of different sections of the population of Sikkim and in the discharge of his special responsibility under this clause, the Governor of Sikkim, shall, subject to such directions as the President may, from time to time, deem fit to issue, act in his discretion.

இது ஏன் வருகிறதென்றால், ஜனதிபதிக்கு முழு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். இதை ஏன் சொல்கிறேனென்றால், அம்மையார் அவர்கள் திடீரென்று இவர்களுக்கெல்லாம் தேச பக்தியில்லையென்று சொல்லி விட்டார்கள். அதனால்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஜனதிபதிக்கு முழு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அந்த மாநிலத்திலே 30, 32 பேரைக் கொண்டு சட்டமன்றத்தை அமைக்கவேண்டும். என்னைக் கேட்டால், கவர்னரே தேவையில்லையென்று சொல்லக்

கூடியவன் நான். கவர்னரே தேவையில்லை. அவர்களே கவனித்துக் கொள்ளமுடியும். ஏனென்றால், அவர்களது தேசபக்தியைக் குறித்து கேள்வி கேட்கக் கூடாது.

அதே மாதிரி, 1937-ம் வருஷத்திலே ஏற்பட்டது. கவர்னருக்கு விசேஷ அதிகாரம் கொடுத்தோம். மற்ற மாநில கவர்னர்களுக்கு இருக்கிற அதிகாரம் இங்கும் இருக்கட்டும். நினைத்தால் கோளாறுகப் போகிறது என்று சொன்னால் கலைத்து எடுத்துக்கொள்ள முழு அதிகாரம் ஜனதிபதிக்கு இருக்கிறது. ஆகவேதான், ராஜ்ய சபையில் பூபேஷ் குப்தா சிக்கிம் கவர்னருக்கு மற்ற கவர்னர்களுக்கு இருக்கிற அதிகாரம் இருந்தால் போதும், அங்கே இருக்கிறவர்கள் படித்து முன்னேறவேண்டும், அவர்களிடம் ஜனநாயக உணர்ச்சி ஏற்பட வேண்டும், இங்கே இருந்து அனுப்பிய கவர்னர் அவர்களை அதிகாரம் பண்ணுகிறார் என்ற கருத்து வளரவேண்டாமென்று நான் சொன்னார்கள். இது இல்லாமலிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அன்றைக்கு அதிகமாக சிக்கிம் மக்களுடைய அபிலாஷைகள் கவனிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அப்படி கவனிக்கப் படும் என்ற காரணத்தால்தான் இந்த மாதிரி திருத்தம் தேவையில்லை யென்று சொன்னார்கள்.

முதல் விஷயம்—நமது நாட்டினுடைய பாதுகாப்பைப் பற்றிச் சொன்னேன். இரண்டாவது விஷயம் It is the consolidation of democracy நாட்டிலே பார்லிமெண்டரி ஜனநாயகம் இருக்கிறது. இந்த பார்லிமெண்டரி ஜனநாயகம் பூரணத்துவம் வாய்ந்தது என்று சொல்லமுடியாது. ஆனால், ஏதோ ஓர் அளவுக்கு முன்னேறிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, கடந்த 20, 25 ஆண்டு அனுபவத்தைப் பார்க்கும்போது பல நல்ல தேர்தல்கள் வந்திருக்கின்றன. தேர்தல்களைக் கண்டிப்பாக நடத்த வேண்டு மென்ற ஒரு முறை வந்திருக்கிறது. அதை வைத்துப் பார்த்தால், குஜராத்திலே தேர்தல் வரப்போகிறது. ஆனால் நம் நாட்டிலே தமிழ்நாட்டிலே மதுரை கார்ப்பரேஷன் தேர்தலைக்கூட ஒத்திப் போட்டுவிட்டார்கள். அது கூடாது என்று சொல்கிறோம். இன்றைக்கு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்கிறபோது ஜனங்கள் மத்தியிலே ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை நாம் போவோம், அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி செய்வோம். தேர்தல்களிலே எவ்வளவோ முரண்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

பாடுகள் எல்லாம் இருக்கின்றன, குறைகள் இருக்கின்றன, அரசியல் சட்டத்தை இயற்றுகிறபோது 21 வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை என்று சொன்னோம். அப்படிச் சொன்னவுடனே, பாருங்கள் படிக்காதவர்களுக்கு எல்லாம் ஓட்டுரிமை கொடுத்து இருக்கிறார்கள், தப்பானவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

இப்போது இருக்கக்கூடிய முறை, கட்சி அரசியல் நடந்துகொண்டு இருக்கிறது, உறுப்பினர்கள் எல்லாம் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து பிரதம மந்திரியை தேர்ந்தெடுக்கவேண்டும், என்ற ஆலோசனை சொல்லப்பட்டது, பார்லிமெண்டரி ஜனநாயக முறையிலே பிரிட்டனின் போக்கை நாம் ஏற்றுக்கொள்ளலாமென்ற முறையிலே பிரிட்டனிலே ஒரு கட்சி மெஜாரிட்டியாக வந்தபிறகு அவர்கள் ஒரு தலைவரைச் தேர்ந்தெடுப்பார்கள். அதற்குப் பிறகு அரசர் அவரைப் பிரதம மந்திரியாக ஆக்கி நீங்கள்தான் மந்திரிசபை அமைக்க வேண்டுமென்று சொல்வார், அப்படிப்பட்ட முறையை நாம் டெல்லியாக இருந்தாலும், தமிழ்நாடாக இருந்தாலும் சரி பின்பற்றி வருகிறோம்.

இப்போது ஜாதி, பணம் எல்லாம் வேலை செய்வதில்லை தேர்தலில். 1967 இல் பார்த்தோம். ஜாதி வேலை செய்யவில்லை, பணமும் வேலை செய்யவில்லை. இவ்வளவு நாட்கள் இருந்துவருகிற காங்கிரஸை ஆட்சியிலிருந்து மாற்றவேண்டுமென்ற எண்ணம் ஜனங்களுக்கு உண்டாயிற்று. அவர்கள் அதை அமல் செய்தார்கள் அதே மாதிரி இன்றைக்கு ஜனங்கள் பக்குவம் அடைந்து வருகிறார்கள். தேர்தல் எப்படி நடத்தவேண்டும், சீர்திருத்தம் என்ன என்ன செய்யவேண்டுமென்பதையெல்லாம் பார்க்கவேண்டும்.

நான் சொல்லவேண்டிய மூன்றாவது முக்கியமான விஷயம்
we must also strengthen our independence
என்பது. நம்முடைய சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றால் எதிரியிடமிருந்து பாதுகாப்பது மட்டுமல்ல, உள்ளேயிருந்தும் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. உள்ளேயிருந்து என்று சொல்கிறபோது நிலச்சீர்திருத்தங்கள் எல்லாம் செய்கிறோம், இருந்தாலும் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் எல்லாம் சர்வ வல்லமை படைத்தவர்களாக

1975 மே 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

லஞ்சத்தின் ஊற்றுக்களாக இருக்கிறார்கள், கோடிக்கணக்கான ரூபாய்களை கறுப்புப்பணமாக வைத்துக்கொண்டு அரசாங்கத்தையே விலைக்கு வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றவேண்டு மென்று சொன்னுல், அதைக் கொஞ்சம்கூட மாற்றக்கூடாது என்று சில சக்திகள் சொல்கின்றன, அவை பிற்போக்கு சக்திகள் என்பது மாத்திரமல்ல. உள்ளே இருக்கிற எதிர்ச்சக்திகள் என்றுகூடச் சொல்லலாம். அவற்றினுல் நாட்டிற்கு அபாயம் ஏற்படுகிற நிலைமை இருப்பதாலே அவைகளையும் பார்க்கவேண்டும். அந்த வகையிலே இந்த நேரத்திலே நல்ல முறையிலே திருத்தம் வந்திருக்கிறது.

For the consolidation of democracy for the security of our borders and also for strengthening of our independence என்ற முறையிலே இந்த மூன்று அம்சத்தையும் வைத்து நாங்கள் இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம்.

பல விவரங்கள் எல்லாம் இன்னும் பேசவேண்டும். நேர மாகிறது, எனக்குப் புரிகிறது. கடைசியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உள்நாட்டிலே இன்னும் கொஞ்சம் அதிகமான சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக் கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் மற்ற கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. வெளிநாட்டிலே நம்முடைய அந்தஸ்து உயர்ந் திருக்கிறது. பங்களா தேஷ் விடுதலைக்கு நம்முடைய ஆட்கள் உயிர் கொடுத்தார்கள். வெளிநாடு சென்றிருந்தபோது அங்கேயிருக்கிறவர் கள் எல்லாம் ஆச்சரியப்பட்டார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் நீங்கள் ஒரு கோடி அகதிகளை ஒரு வருஷமாகக் காப்பாற்றியிருக்கிறீர்கள். ஏழரைக் கோடி மக்களுக்கு விடுதலை பெறுவதற்கு ஆதரவாக இருந்திருக்கிறீர்கள் என்று பெருமையாகச் சொல்கிறார்கள்.

நம்முடைய நாட்டின் பிரதிநிதியாக ஜமெய்க்காவிற்குப் போயிருக் கிற நம்முடைய பாரதப் பிரதமர் விடுதலைப் போராட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட் டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல 100-க்கு 90 பேர்கள் ஆப்பிரிக்க மக்களாக இருக்கிற ரொடிஷியாவிலே சில வெள்ளையர்களின் ஆதிக்கம் இருக்கக்கூடாது அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மே 2

Our image in the outside world is very good.

நம்முடைய விவகாரத்தை உள்ளே நாம் தீர்த்துக்கொள்ளலாம். பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு இடைஞ்சலாக யார் வந்தாலும் நாம் அவற்றைச் செய்தாகவேண்டும். அந்த வகையிலே சிக்கிம் இருக்கவேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி எங்கள் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது மட்டுமல்ல, எல்லையிலே இருக்கிற பூடானும் நம்மோடு சேர வேண்டும். நேபாளத்தைப் பொறுத்தவரையிலே இன்னும் நெருக்கமாக வர ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மத்திய அரசு அந்த ஏற்பாடுகளைச் செய்வது நல்லது என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

சிக்கிம் போன்ற முக்கியமான ஒரு பகுதி நமது நாட்டோடு இணைந்தது நம் நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது, நாமும் வரவேற்கிறோம். எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னதுபோல் திபெத்திலிருந்து நாத்துலா கணவாய் வழியாகப் போகக்கூடிய வழியிலே கேந்திரமான நிலைமையிலே சிக்கிம் இருக்கிறது. அங்கேயுள்ள அரசர் மக்களை ஆண்டுகொண்டு வந்தார். அந்த ஆட்சியிலே குறுக்கிட நமக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. இந்த நேரத்திலே உலகத்திலே எத்தனையோவிதமான மாற்றங்கள் ஏற்பட்டு ஜனநாயக அமைப்புகள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. மக்களாட்சி சென்ற ஆண்டிலேதான் சிக்கிமிலே கொண்டுவரப்பட்டது. மக்களாட்சி கொண்டுவந்தாலும்கூட முக்கியமான அதிகாரங்களையெல்லாம் அந்த அரசர் சோக்கியால்தான் வைத்துக் கொண்டிருந்தார்.

சிக்கிம் ஒரு தனி நாடு என்று குறிப்பிட்டார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள்கூட அது ஒரு சமஸ்தானம் என்று சொன்னார்கள். எப்படி மற்ற மற்ற சமஸ்தானங்கள் எல்லாம் இருந்தன. ஒவ்வொரு சமஸ்தானமும் இந்தியாவில் சேர்ந்துவிட வேண்டுமென்று மக்கள் கிளர்ச்சி செய்து சமஸ்தானங்களையெல்லாம்

1975 மே 2] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இணைத்துவிட்டார்களோ அந்த முறையில் அப்போது அங்கேயுள்ள மக்கள் கிளர்ச்சி செய்யவில்லை, இப்போது கிளர்ச்சி செய்து சேர்ந்து கொண்டு விட்டார்கள். ஏதோ நாம் போய் சிக்கிமைப் பிடித்துவிட்டதாக பாகிஸ்தானும் சீனவும் சத்தம் போடுகிறார்கள்.

இந்தியா ஒரு விஸ்தரிப்பு நாடு என்று, இப்போது இல்லை ரொம்ப நாளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சீனதான் நம்முடைய எல்லைப் பகுதியிலே சில பகுதிகளைப் பிடித்துக்கொண்டு விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது. நாம் செய்த தவறு திபெத் சாவர்னிடி என்று ஒத்துக்கொண்டது, திபெத் வழியாக அவர்கள் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தவறை இன்றைக்கும் நாம் செய்ய முடியாது. சர்வ தேச ரீதியிலே அது தனி நாடாக இருந்தாலும்கூட அங்குள்ள மக்கள் இணைப்பை விரும்பாவிட்டால் நாம் சேர்த்துக்கொண்டிருக்க முடியாது. அங்குள்ள மன்னர் மக்களுக்கு விரோதமாக இருக்கிறார். அவரை நாம் கண்டிக்கிறபோது அவர் வேறு யாருடனாவது சேர்ந்துகொண்டு விட்டால் மக்கள் நிலைமை என்னவாகுமோ என்று நினைத்து அந்த மக்கள் கிளர்ச்சி செய்தார்கள், மக்கள் அபிப்பிராயத்தை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த நாட்டை நாமாக எடுத்துக்கொள்ளவில்லை.

பாகிஸ்தானும் சீனவும் இப்போது எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. என்ன காரணத்தினாலே சீன அதிகமாக நம்மீது பகைமை கொண்டிருக்கிறது, அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை எப்படியிருந்தாலும்கூட எதற்காக பாகிஸ்தானும் சீனவும் ரொம்ப மும்முரமாக நம்மை எதிர்க்கின்றன என்று பார்க்கவேண்டும்.

சீன எது வேண்டுமானாலும் பேசும். நாம் செய்த ஒரு விஷயம், ஐக்கிய நாடுகள் சபையில் அவர்கள் உறுப்பினராக இருக்க வேண்டுமென்று போராடினோம். அந்தத் தவறுக்காக நம்மைப் பெரும்பகை நாடாக சீன கருதுகிறது. ரஷ்யாவிற்கும் சீனவிற்கும் இடையில் ஏற்பட்ட கொள்கை வேறுபாடுகளின் காரணமாக, நாம் ரஷ்யாவோடு சேர்ந்திருக்கிறதுபோல் இருப்பது இன்னும் சீனவிற்கு அதிக ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னும் ஒரு பதட்ட நிலையிலே நம் நாடு இருப்பதை மறுத்துவிடுவதற்கில்லை. பதட்டநிலை இன்னும் இருக்கிறது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 மே 2

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் சிம்லாவில் உடன் பாடு ஏற்பட்டது. பாகிஸ்தான் நம்முடைய நேச நாடாக ஆகி விட்டது. பகைமையுணர்ச்சி போய்விட்டது, எனவே பாதுகாப்பிற் காகச் செலவிடும் அந்தப் பணத்தைக் கொண்டு உள்நாட்டு அபி விருத்திக்குச் செலவு செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்று கருதியதற்கு மாறுக, இன்றைக்கு அமெரிக்கா செய்திருந்த ஆயுத விற்பனைத் தடையை நீக்கி பாகிஸ்தானுக்குக் கொடுப்பதால் இன்றைக்கு பாகிஸ்தானின் பேச்சு எந்த அளவிற்கு சிம்லா ஒப்பந்தத் திற்கு மாறுக இருக்கிறது என்பதையும், அதற்கு இன்னும் பகைமை உணர்வு போகவில்லை என்பதையும் பார்க்கிறோம்.

ஆகவே, உலகத்திலே இருக்கிற அமெரிக்க வல்லரசு எங்கே தளம் கிடைக்கும், எந்த இடத்தில் ஆயுதங்களை விற்பனை செய்யலாம், எந்த இடத்திலே மக்கள் கிளர்ச்சியை ஏற்படுத்தச் செய்யலாம் என்று முயற்சிப்பார்கள். இந்த இடத்திலே செய்ய மாட்டார்கள், இந்தியா வினிடத்திலே செய்ய மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. வியட்நாமில் இருந்து எல்லா அமெரிக்கர்களும் குடிபெயர்ந்து விட்டார்கள். புரட்சி வியட்நாம் அரசுக்குப் பாராட்டைத் தெரிவித்து, இந்திய அரசு அங்கீகாரம் செய்திருக்கிறது. வியட்நாம் யுத்தத்தில் அவர்கள் கொள்கை தோல்வியடைந்துவிட்டது. எனவே அவர்கள் தங்கள் ஆயுதங்களை வேறு பக்கத்தில் செலவழிக்க வேண்டும். ஏகாதிபத்திய நாடு என்றுல் ஆயுதங்களைச் சும்மா வைத்துக் கொண்டிருக்க முடியாது என்பது ஒரு தத்துவம். ஏகாதிபத்திய நாடு தன்னுடைய நிலையைக் காப்பாற்றிக்கொள்ள தன்னுடைய ஏகாதிபத்தி யத்தை விஸ்தரிப்பு செய்து கொண்டிருந்தால்தான் ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும் என்பதால், பாகிஸ்தான அதற்குத் தோதுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே, வெளிநாட்டு ஆபத்து போய்விட்டது என்று சொல்ல முடியாது. எல்லை நாடுகளைப் பிடிக்க அல்ல, நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள நம்மாலான காரியங் களைச் சர்வதேச ரீதியில் இந்தியா மேற்கொண்டு வெற்றி கண்டிருக் கிறது. அண்டை நாடுகளை உறவு நாடுகளாக, நட்பு நாடுகளாக ஆக்கிக் கொள்வது, உள்நாட்டிலே பல பிரச்சினைகளைத் தீர்த்து இங்கு ஒரு அமைதியை ஏற்படுத்தியும், வெளியிலிருந்து ஆக்கிரமிப்பு வராத வண்ணம் சூழ்நிலைகளை ஏற்படுத்தியும் இந்திய அரசு செய்து வந்திருக் கிறது. அதிலே சிக்கிம் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை களில் ஒன்றாகும்.

1975 மே 2] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அதுவல்லாமல், ஜனநாயக முறையில் பொதுமக்களின் கருத்தை எந்த அரசும் புறக்கணிக்க முடியாது. மக்கள் கருத்துக்குப் புறம்பாக யார் எங்கே தலையிட்டாலும் அது நிற்காது, அது அடிபட்டுப் போய் விடும் என்பதை வியட்நாம் காட்டுகிறது. அங்கே 30 ஆண்டுக்கால மாக யுத்தம் நடந்திருந்தாலும் மக்கள் உறுதியோடு நின்று போராடியதால் பெரிய சக்தியாக விளங்கிய வல்லரசை, அமெரிக்காவை விரட்டியது. அதுபோல இந்தியாவிலுள்ள மக்களிடத் தில் எழுச்சி ஏற்படும்பொழுது, அதை அடக்கி அந்நியர்கள் தலையிடு வது சாத்தியம் அல்ல. அதைப்போல சிக்கிமில் மன்னர் சோக்கியால் எவ்வளவோ தகிடுதத்த வேலைகள் செய்தாலும் அந்த மக்கள் உறுதி யோடு நின்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். அதை நாம் வரவேற்கிறோம்.

அடுத்து, இப்பொழுது என்ன ஆயிற்று? வியட்நாம் யுத்தம் முடிந்து அமெரிக்கர்கள் கிளம்பிவிட்டார்கள். இந்தமாதிரி நிலைமை வந்து கொண்டிருக்கிறது.

அடுத்து காஷ்மீர் பிரச்சினை பெரிய பிரச்சினை. இதில் நாம் ஒரு முக்கியமான முடிவெடுத்து மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லாவிடம் பொறுப்பை ஒப்படைத்து, பெரும் மாற்றத்தைக் காஷ்மீர் பகுதியில் ஏற்படச் செய்ய, அங்குள்ள சங்கடங்களைத் தீர்க்க முயற்சியெடுக் கிறோம். ஆஜாத் காஷ்மீர் பாகிஸ்தானில் இருக்கிறது. அதுவும் நம்மைச் சேர்ந்த பகுதி என்பதில் சந்தேகமில்லை. அதைப் பாகிஸ்தான் வைத்துக்கொண்டு, காஷ்மீர் சம்பந்தமாக ஷேக் அப்துல்லாவுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற அளவில் உள்நாட்டு விஷயங் களைப்பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பது வருந்தத் தக்கது. சிக்கிம் பிரச்சினை எப்படியோ அப்படியே ஆஜாத் காஷ்மீரும் சேர வேண்டும், சேரும் என்று கருதுகிறேன்.

டிகோகார்ஷியா பகுதியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்நியத் தலையீட்டின் காரணமாக இந்தியாவிற்குப் பாதுகாப்புத் துறையிலே மிகுந்த சங்கடமான நிலையில் இருக்கிறோம் என்ற முறையிலே இவ்வளவு சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. சிக்கிம் சம்பந்தமாக மத்திய அரசு எடுத்த முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 மே 2

அடுத்து, கவர்னர் சம்பந்தமாகப் பேசினார்கள். அதைப்பற்றி ஒரேயொரு வார்த்தை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். கவர்னருக்கு ஸ்பெஷல் பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது சில உறுப்பினர்களின் கருத்து. அது இருக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். ஏனென்றால் ஸ்பெஷல் பவர் கொடுத்துவிட்டால் அப்படியே அவர்கள் அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்தி விடுவார்கள் என்று பொருள் இல்லை. அது பிற்பட்ட பகுதி, மலைவாசிகள் வாழும் பகுதி, குறைந்த மக்கள் வாழும் பகுதி, வளர்ச்சி இல்லாத பகுதி, சி.ஐ.ஏ. எங்கு பார்த்தாலும் புகுந்து விளையாடுகிறார்கள். எனவே, நமக்குத் தெரியாமல் எதுவும் நடக்கலாம். ஆகவே, எல்லைப் பகுதிகளில் ஸ்பெஷல் ரெஸ்பான்சிபிலிட்டீஸ் கொடுத்து, அதிகப் பாதுகாப்புக்கு வகை செய்ய வேண்டும் என்பதால்தான் ஸ்பெஷல் பவரே தவிர, அதை அந்த கவர்னர் பயன்படுத்தி விட்டார் என்ற பொருள் அல்ல. அதைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டியதில்லை. அதையும் இந்தச் சபை ஏற்றுக்கொண்டு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து அமர்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்தச் சபையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கான்ஸ்டிடியூஷனல் அமெண்டிமெண்டில் இன்றைக்கு சிறிய நட்சத்திரமாக இருந்தாலும் பிரகாசிக்கும் நட்சத்திரமாக சிக்கிம் என்ற மாநிலம், நாடு நம்முடைய இந்திய யூனியனோடு சேர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சிறிதுகாலம் சர்தார் வல்லபாய் பட்டேல் இருந்திருந்தால் இந்த சிக்கிம் என்ற நாடு, இமாலயாவில் இருப்பதால்—பல சாம்ராஜ்யங்களையெல்லாம் அவர்கள் காலத்திலே, ஹைதராபாத்தையும், மைசூரையும், பாட்டியாலாவையும், பரோடாவையும் இது போன்ற நாடுகளையெல்லாம் நம்முடன் இணைத்து மாநிலங்களாக இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டதுபோல் அன்றைக்கு அவர் இதைச் சேர்த்திருப்பாரேயானால் பல அயல்நாடுகளில் இருப்பவர்களெல்லாம் சிக்கிம் நம்முடைய இந்திய யூனியனோடு சேர்ந்த காரணத்தால்

1975 மே 2] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

முதலைக்கண்ணீர் வடித்து பரிதாபகரமான நிலையாகக் கருதுபவர் களுக்கு இடையில் நாம் தேவையற்ற தலையீடுகளையெல்லாம் தவிர்த் திருக்க முடியும் என்பது என்னுடைய கருத்தாகும்.

சிக்கிம் இன்றைக்கு ஏதோ புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மாநிலமோ அல்லது திடீரென்று ஏற்பட்ட ஒன்றோ அல்ல. ஏற் கெனவே நம்முடைய கலாச்சாரத்திற்கும், நம்முடைய கருத்துக்கும், நம்முடைய பொறுப்புக்கும் தக்கவாறுதான் இருந்திருக்கிறது. சரித்திர பூர்வமாக ஆதாரத்தோடு கூற வேண்டுமானலும்கூட சிக்கிம் எப்பொழுதோ சேர்ந்திருக்க வேண்டிய ஒன்று. காலம் சென்று இப்பொழுதாவது சேர்ந்திருக்கிறதே என்பதற்காக நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் சீனு போன்றவை அமெரிக்கா போன்றவை கூறுவதைப்போல ஏதோ பலாத்காரமாக எடுக்க விரும்பவில்லை. ஏற்கெனவே நாம் தாங்கிக்கொண்டிருக்கின்ற சுமையோடு இதையும் ஒரு சுமையாக எடுத்துக்கொள்ள முன்வரவில்லை, அல்லது அதன் நிலப் பரப்புக்களை கருதிக்கொண்டு நாம் சிக்கிமைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்பதைத் தெளிவாக அறியவேண்டும்.

[பிற்பகல் 1-00]

அங்கு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகவும், இன்னும் கலவரங் கள், ரத்தக் கலவரங்கள் ஏற்படக்கூடுமோ என்ற பீதியின் காரண மாகவும் சிக்கிம் நாட்டு மக்கள் வாக்கெடுப்பின் மூலமாக ஜனநாயக முறையில் அவர்கள் கொடுத்த தீர்மானத்தின் காரணமாக இன்றைக்கு அதை இந்தியாவோடு இணைத்துக் கொள்ள அரசு முடிவு செய்திருக் கிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனுடைய நிலப்பரப்பையும், அந்த நாட்டையும் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணி இன்று அங்கு சோக்கியால் ஒழிக்கப்பட்டு மக்கள் ஆட்சியுடன் சிக்கிம் இந்தியாவுடன் சேர்ந்திருப்பதை மகிழ்ச்சி யோடு வரவேற்று எங்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து வரவேற் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கின்ற முறையில் சிக்கிமை சேர்க்கின்ற தன்மையில் ப்ராஞ்மன்ற இரு அவைகளாலும் நிறை வேற்றப்பட்ட சட்டத் திருத்தத்தை நாமும் ஆதரிக்கிறோம் என்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மே 2

வகையில் கொண்டு வரப்பட்டுள்ள நீர்மானத்தை ஆதரித்து அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கருத்துக்களை வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலமாக சிக்கிம் இந்தியாவினுள்ள மாநிலங்களில் ஒன்றாக ஆகிறது. அது தொண்ணூராயிரத்துச் சில்லரை மக்களைத்தான் கொண்டிருந்தாலும் அது "ஸ்டேட்ஸ்" என்ற தகுதியைப் பெறுகிறதே தவிர வேறல்ல. யூனியன் டெரிடெரி என்ற வகையில் இல்லாமல் 21 மாநிலங்கள் என்னென்ன தகுதிகள் பெறுகின்றனவோ அந்தந்தத் தகுதிகளின் அடிப்படையில் 22-வது மாநிலமாக சிக்கிம் இணைகிறது என்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதோடு மட்டுமல்லாமல் சிக்கிம் மக்கள் நாடாளுமன்ற மக்கள் அவைக்கு ஒரு உறுப்பினரையும், மாநிலங்கள் அவைக்கு ஒரு உறுப்பினரையும் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் பெறுகிறார்கள். இந்தச் சட்டத் திருத்தமானது அரசியலமைப்புச் சட்டத்தின்படி 21 மாநிலங்களில் 11 மாநிலங்கள் ஏற்றுக் கொண்டாலே குடியரசுத் தலைவர் அனுமதியைப் பெற இயலும். ஆனால் இது மிக முக்கியமான தீர்மானமாக இருக்கும் காரணத்தாலும், சிக்கிமை இந்தியாவோடு இணைக்கின்ற அளவுக்கு அமைந்திருக்கும் தீர்மானமாக இருக்கும் காரணத்தாலும் இந்தியா முழுவதும் ஏகோபித்து ஆதரிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் நல்லது என்ற கருத்துக்கு இணங்கத்தான் இந்த மாநில அவையை விரைவாகக் கூட்டி விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தேன். அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். ஆதரவு தந்த வகையில் சிலபல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதையொட்டிய சில கருத்துக்களையும் வழங்கியிருக்கிறார்கள்.

பல உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மறைந்த பிறகு 580-க்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் மெல்ல மெல்ல இணைந்து கொண்டே வந்த தன்மையைப் பார்க்கிறோம். இந்தியாவைக் குடியரசு நாடாக ஆக்கி அரசியலமைப்புச் சட்டம் அமைத்த பிறகும் கூட சிலபல நாடுகளைச் சேர்த்துக் கொள்ள

1975 மே 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கோவா, டையூ, டாமன் ஆகியவற்றை இந்த வகையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி இந்தியாவோடு இணைத்துக் கொள்ளப் பட்டு மாநில அதிகாரங்கள் தரப்பட்டன. அதைப் போல் பாண்டி, மாகி, ஏனும் ஆகிய பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளவும் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்றபோது இதிலே குறிப்பிட் டிருக்கும் சில தன்மைகளை எடுத்துச் சொல்லும்போது—

" It shall be deemed to have come into force on the date on which the Bill for this Act (introduced in the House of the People as the Constitution (Thirty-eighth Amendment Bill, 1975) as passed by the House of the People, is passed by the Council of States. "

என்று அவர்களே நிறைவேற்றி விட்டதன் காரணமாக, இங்கே வெறுமனே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதாகத்தான் பொருள்படும் என்று தெரிவித்தார்கள். ஒவ்வொரு தீர்மானம் வருகிறபோதும் அப்படித்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படித் தான் சட்டதிட்டத்தின்படி நிறைவேற்ற முடியும். என்றிலிருந்து நடைமுறைக்கு வருகிறது என்ற கேள்வி எழுந்து, பாராளுமன்றத்தில் என்றைக்கு நிறைவேறுகிறதோ அன்றிலிருந்து நடைமுறைக்கு வரு கிறது. சட்டமன்ற நடைமுறைப்படி அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்க மாநிலங்களின் ஆதரவு பெற்று குடியரசுத் தலைவர் கையெழுத்திட்ட பிறகுதான் இணைதல் வேண்டும். ஏற்கெனவே, கோவா, டையூ, டாமனைச் சேர்க்கிறபோதும்—

It shall be deemed to have come into force on the 20th day of December 1961

என்று போட்டாலும் சட்டத்தில் 27-ம் தேதி மார்ச் 1962-ல் தான் சேர்த்திருக்கிறார்கள்.

அதைப் போல் பாண்டிச்சேரியைச் சேர்க்கும்போது கூட ஆகஸ்டு மாதம் 16-ம் தேதி, 1962-ம் வருஷம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 28 டிசம்பர் 1962-ல்தான் அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. நடைமுறைக்கு வருவது எந்த தினத்திலிருந்து என்றுல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மே 2

நாளில் இருந்துதான். அந்த வகையில்தான் இன்று சிக்கிமும் இணைக் கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்தத் திர்மானத்திற்கு எல்லோரும் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். அதிலே சிக்கிமை இந்தியாவோடு இணைக்காமல் அங்கே இருப்பவர்கள் உறுப்பினர்களாகப் பாராளுமன்றத்தில் வந்து உட் காரலாம் என்று கொண்டு வந்தபோதுதான் மாண்புமிகு உறுப்பினர் கள் குறிப்பிட்டதைப் போல் பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எதிர்த்தார்கள், அப்போது எதிர்த்தார்கள், இப்போது ஆதரிக்கிறார்களே என்று சொன்னார்கள். அப்போதும் எதிர்க்கவில்லை. சட்டச் சிக்கலைத்தான் அப்போதும் எடுத்துத் தெரிவித்தார்கள்.

பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்த திரு. இரா. செழியன் பேசும்போது தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்—

" There can be no two opinions that we all desire close and friendly relations between Sikkim and India. We are also appreciative of the aspirations of the people of Sikkim and also sympathise with their relentless endeavour to improve the democratic content and the representative character of the Government they have. We also share the feeling that we should extend goodwill and neighbourly feelings to the people of Sikkim in their efforts to improve their economic conditions."

என்று அந்தத் திருத்தம் வந்தபோது தெரிவித்திருக்கிறார்கள். அன்றைக்குக் கடுமையாக எதிர்த்தோம். இன்றைக்கு மாறிவிட்டோம் என்ற நிலை இல்லை. அன்றைக்கும் முழுக்க ஆதரித்தோம்; ஆனால் சட்ட சிக்கலைத்தான் சுட்டிக்காட்டினோம்.

"It is not an ordinary amendment to the Constitution; It is an amendment to the basic character of Constitution itself, From the federal, we are changing to the confederal one."

1975 மே 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்ற கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். திரு. இரா. செழியன் சொல்லும்போது—

"Article 84 says that a person shall not be qualified to be chosen to fill a seat in Parliament unless he is a citizen of India. Article 102 is more emphatic; it says a person shall be disqualified for being chosen as a member of Parliament if he is not a citizen of India or has voluntarily acquired the citizenship of a foreign State or is under any acknowledgment of allegiance or adherence to a foreign State. I can quote many other clauses which are going to be nullified by this amendment."

என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

84-வது ஆர்டிகிள், 102-வது ஆர்டிகிள் இவற்றின்படி இந்தியாவில் குடியுரிமை பெறுத யாரும் பாராளுமன்றத்தில் இடம் பெற முடியாது என்ற நிலை இருக்கிறது: அப்போது இந்தியாவில் சிக்கிம் இடம்பெற வில்லை. சிக்கிம் மக்கள் இந்தியக் குடிமக்கள் ஆகமாட்டார்கள். இந்தியக் குடிமக்களாக ஆகாதவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினர் களாக ஆவது பொருத்தமா என்ற கேள்வியைத்தான் திரு. இரா. செழியன் அன்று எழுப்பினர். இப்போது சிக்கிம் முழுமையான உறவைப்பெற்று இந்தியாவின் பகுதியாக—எல்லா மாநிலங்களிலும் இருக்கிற மக்களுக்கும் என்ன குடியுரிமை உண்டோ அதே அளவுக்குக் குடியுரிமை சிக்கிம் மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிற நிலையில் இப்போது அவர்கள் பாராளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் இடம் பெறலாம். இப்போது 84-வது விதி, 102-வது விதி—சங்கடங்கள் வந்து சேர வழியில்லை.

மற்றைய மாநிலங்களுக்கு ஒத்த அதிகாரங்கள் கொடுக்கப்பட் டிருந்தாலும் கவர்னருக்குத் தனி அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமா என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது பாராளுமன்றத் திலேயே எழுப்பப்பட்டது. மற்றைய மாநிலங்களுக்கு இதிலே எந்த வகையில் உரிமைகள் இருக்கின்றனவோ அதே அளவுக்கு அவர் களுக்கும் இருக்க வேண்டுமென்பதுதான் விருப்பம். பாராளுமன்றத் திலும் அதை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாரிமுத்து அவர்களும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது இளமையாக இருக்கும் காரணமாகவும், சிறிது நாள் பார்க்கவேண்டிய தன் காரணமாகவும் கவர்னருக்கு அந்த அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மே 2

நமது விருப்பம் கூட, மற்ற மாநிலங்களுக்கு எந்த அடிப்படையில் உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ அந்த வகையில் மற்ற மாநிலங்களுக்கும் அவை கொடுக்கப்படுகிற சூழ்நிலை வளரவேண்டும் என்ற கருத்துதான் இங்கு பரிமாறப்பட்டிருக்கிறது. அதைத்தான் பலரும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச்சொன்னார்கள். மாநில சுயாட்சி பற்றி இந்தப் பிரச்சினையில் கொண்டு வந்து புகுத்தி மேலும் மேலும் நீனவு படுத்தி மாநில சுயாட்சிக்கு வலிவூட்டுகிற அளவிற்கு வாதத்தை வைத்துக் கொண்டிருப்பது எங்களுக்கு நல்லதுதான். அதை மேலும் மேலும் வலிவூட்டுவதற்கு இது பயன்படுமே தவிர வலிவு இழந்து விடாது.

மாநில சுயாட்சியை இன்றும் கேட்கிறோம். அன்று எவ்வளவு அழுத்தந்திருத்தமாக மாநில சுயாட்சி கேட்டோமா அப்படியே இன்றும் கேட்கிறோம். இந்தச் சிக்கிம் பிரச்சினைக்குப் பிறகு அதை இன்னும் அழுத்தந்திருத்தமாக கேட்கமுடியும். எப்படி அரசியல் சட்டத்தை இந்தச் சிக்கிம் இணைப்பிற்காக திருத்தி மாற்றியமைக்கிறோமோ அதேபோல் அரசியல் சட்டத்தை மாற்ற முடியாது என்பதல்ல. மாற்ற முடியும். மாநில சுயாட்சி உரிமையை நாம் கேட்கலாம். 21 மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். இனிமேல் 22 மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிற நிலைதான் வரும்.

மாநில சுயாட்சி கேட்பதற்கும் இந்தச் சிக்கிம் பிரச்சினைக்கும் இடையே எந்தவிதமான இடர்ப்பாடும் ஏற்படவில்லை. பாண்டிச்சேரி, கோவா, டையூ, டாமன் போன்றவை இந்தியாவோடு சேர்ந்தன. இப்போது சிக்கிம் சேருகிறது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி நேபாளம், பூடான், திபெத் போன்ற மற்றப் பகுதிகளும் சேர்க்கப்படும் நிலை வந்தால் நல்லதுதான். அப்போது அவைகளுக்கும் சேர்ந்து நாம் மாநில சுயாட்சி கேட்கலாம். ஆனால், அந்தப் பிரச்சினைக்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. அது எப்போதும் அழுத்தந்திருத்தமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. **நம்பிக்கை** இழந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். இடம் மாறினால் **நம்பிக்கை** மாறலாம், சூழ்நிலை மாறினால் நம்பிக்கை மாறலாம்.

1975 மே 2]

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரேயிடத்திற்குத்தான் மாறியிருக்கிறேன். இந்திய நாடு ஒன்றுபட்டிருக்கவேண்டும். முன்பு பிரிவினை கேட்டோம்; இப்போது பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம். ஆனால், பிரிவினைக்குரிய காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அவற்றைக் கைவிடவில்லை என்று சொல்கிறார்கள். அதை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப் பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். பிரிவினையை கைவிட்டு விட்டோம். அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அதற்காக இன்னும் வாதாடிக் கொண்டிருக்கிறோம். அது வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. இடம் மாறினால் நம்பிக்கை மாறலாம் என்று சொன்னது அம்மையாரைப் பற்றிச் சொன்னதல்ல. ஆலடி அருணா அவர்கள் சொன்னார்கள். அவர்களுக் காகத்தான் சொன்னேன்.

காஷ்மீருக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நமக்கும் அதிக அதிகாரங்கள் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார் கள் என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். பக்கத்தில் சீனாவை வைத்துக்கொண்டு, அன்னிய நாடு களை வைத்துக்கொண்டு, பக்கத்தில் பாகிஸ்தானை வைத்துக்கொண்டு காஷ்மீர் அதிக உரிமைகளை, அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டிருக் கும்போது ஆபத்து எதுவும் இல்லாத மற்ற மாநிலங்கள் அந்த அள விற்கு உரிமைகளைப் பெறுவதில் என்ன இடர்ப்பாடு இருக்கமுடியும்? பக்கத்தில் எதிரிகளை வைத்துக்கொண்டிருக்கிற மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தால், காஷ்மீர் நிம்மதியாக வாழமுடியும் என்றால், அவ்வளவு ஆபத்து இல்லாத மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் அவ்வளவு அதிகாரங்கள் கேட்பதில் தவறு இல்லை. அப்படி கேட்பதற்கு மற்ற மாநிலங்களுக்கும் உரிமை இருக்கிறது. கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அது தனிப் பிரச்சினை.

இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதா இல்லையா என்பதுதான் பிரச்சினை. இதில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கில்லை. திரு. தங்கமணி அவர்கள் சொன்னதுமாதிரி கருத்துக்களை வேறு ஒரு தீர்மானம் மூலமாகக் கொண்டுவந்து நிறைவேற்றி அல்லது அனுப்பி வைக்க உரிமை இருக்கிறது. சில பல கருத்துக்களைச் சொன்னார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மே 2

ஆனால், அத்தனைபேர்களும் இந்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படவிருக்கிறது என்ற நம்பிக்கை தரும் வகையில் இது அமைந் திருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"சிக்கிம்மை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்கு வதற்கென, "1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறுவது திருத்த) சட்டம்" என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடி வின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும் நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பகுதி (2)-து வரம்புரையின் எல்லையளவிற்குள் வரும் சட்டத் திருத்தங்களை இப் பேரவை ஏற்று உறுதி செய்கிறது."

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(1) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பது குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம் என்ற தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-15 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.